இந்திய
கம்யூனிஸ்ட் கட்சி
(மார்க்சிஸ்ட்)

15 வது தமிழ் மாநில மாநாடு



வெகுஜன ஸ்தாபனங்களின் வேலை அறிக்கை இணைப்பு அனுபந்தங்கள்

1995 மார்ச் 1 - 4

எம். பசவபுன்னையா நினைவரங்கம்
கடலூர்

தொழிற்சங்க அரங்கில் நடைபெற்ற பிரதான போராட்டமும் அனுபவமும்

பொருளாதார கொள்கையை எதிர்த்து

1991 நவம்பர் 29ல் நடைபெற்ற நாடு தழுவிய பொது வேலை நிறுத்தம் நடைபெற்ற சில நாட்களுக்குள் தஞ்சை மாநாடு நடை பெற்றது.

அதைத் தொடர்ந்து, ஒவ்வொரு ஆண்டும் ஒரு பொது வேலைநிறுத்தம் என 1992 ஜூன் 16, 1993 செப்டம்பர் 9, 1994 செப்டம்பர் 29 என மூன்று பொது வேலைநிறுத்தங்கள் மத்திய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராக நடை பெற்றுள்ளது.

ஒவ்வொரு முறையும் அதற்கு முந்தைய வேலைநிறுத்தத்தைவிட கூடுதலான தொழிலாளர்களையும் ஊழியர்களையும் வேலைநிறுத் தத்தில் ஈடுபடச் செய்ய முடிந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

தொழிலாளர்கள் மட்டுமல்லாது, மத்திய - மாநில அரசு ஊழி யர்கள், வங்கி - இன்சூரன்ஸ் ஊழியர்கள், ஆசிரியர்களில் ஒரு பகுதி யினர் என ஒன்றுபட்ட போராட்டமாக நடைபெற்றுள்ளது. சிஐடியு வும், நமது தோழர்கள் தலைமையேற்றுள்ள இதர அமைப்புகளும் மாநில - மாவட்ட மட்டங்களில் பல்வேறு சிரமங்களுக்கு இடையே, முன்முயற்சி எடுத்து செயல்பட்டுள்ளனர். மக்களிடையே ஒரு தாக் கத்தை ஏற்படுத்தும் அளவிற்கு இந்த வேலைநிறுத்தங்களும், அதை யொட்டிய பிரச்சார இயக்கங்களும், கூட்டாகவும் தனியாகவும் நடைபெற்றுள்ளன.

1992 நவம்பரிலும், 1994 ஏப்ரல் மாதத்திலும் டில்லியில் நடை பெற்ற பேரணிகளில் நமது மாநிலத்திலிருந்து தொழிலாளர்களும் மத்தியதர வர்க்க ஊழியர்களும் பெருமளவில் கலந்து கொண்டுள் ளனர்.

மாநில ரீதியாக 1992 மார்ச் மாதத்தில் நடத்தப்பட்ட கருத்தரங்கத்தில் மேற்குவங்க நிதி அமைச்சர் அசீம்தாஸ் குப்தா கலந்து கொண்டார். நமது மாற்று கோஷங்களை முன்வைப்பதற்கு இந்த மாநாடு பயன்பட்டது. இதைத் தொடர்ந்து மாநிலம் முழுதும் அரங்க வாரியாகவும், கூட்டாகவும் பல சிறப்பு மாநாடுகள் நடைபெற்றன. பெருமளவிலான வாயிற்கூட்டங்களும் ஊழியர் கூட்டங்களும் நடைபெற்றதோடு பல லட்சக்கணக்கான துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டன.

மத்திய அரசின் பொருளாதார கொள்கைகளையே அமுல் படுத்தி வரும் மாநில அரசு மேற்கொண்டு வரும் தனியார்மயமாக்குதல் நடவடிக்கைகளை எதிர்த்தும் இந்த காலத்தில் கூட்டுப் போராட்டங்களையும் தனித்த இயக்கங்களையும் நடத்தியுள்ளோம்.

1993 ஜூன் 5 அன்று மாநில அரசு போக்குவரத்து நிறுவனங்களில் தனியார்மயமாக்குதலை எதிர்த்து நடைபெற்ற வேலைநிறுத்தம் மிக முக்கியமான நடவடிக்கையாகும். நமது சம்மேளனத்தின் முன்முயற்சியோடு தொமுச, ஏஐடியுசியையும் இணைத்து இந்த ஒரு நாள் வேலைநிறுத்தம் நடைபெற்றது.

1994 செப்டம்பர் 29 வேலைநிறுத்தத்திற்கு முன்னதாக, தேசிய மேடையின் அறைகூவலுக்கு ஏற்ப நடைபெற்ற ரயில் மறியல், வேலைநிறுத்த வெற்றிக்கும், பிரச்சாரத்திற்கும் நல்லமுறையில் பயன்பட்டது. ஆலைத் தொழிலாளர்களும் மத்தியதர வர்க்க அமைப்புகளில் மருத்துவ பிரதிநிதிகளும் இதர வெகுஜன அமைப்புகளோடு இந்த மறியலில் பங்கேற்றனர்.

வங்கி, இன்சூரன்ஸ், தொலை தொடர்பு துறைகளில் அரங்க வாரியாக நடைபெற்ற வேலைநிறுத்தங்களும் மத்திய பொதுத் துறை நிறுவனங்களில் 1994 ஜூலை 14 வேலைநிறுத்தமும், புதிய பொருளாதார கொள்கையை எதிர்த்து நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டங்களில் குறிப்பிடத்தக்கதாகும்.

புதிய பொருளாதார கொள்கையின் நேரடி விளைவுகளை எதிர்த்து, ஐஎன்டியுசி உட்பட அனைத்து சங்கங்களையும் ஒன்று படுத்தி, சேலம் மாக்னசைட் தொழிற்சாலைகளில் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட வேலைநிறுத்தங்கள், ரயில் மறியல், சிறப்பு மாநாடுகள் குறிப்பிடத்தக்கதாகும். இறக்குமதி வரிகள் குறைக்கப் பட்டதை ஓரளவு உயர்த்தச் செய்வதற்கு இந்த போராட்டங்களி னால் சாத்தியமாயிற்று.

பி.எச்.இ.எல்., இந்துஸ்தான் போட்டா பிலிம்ஸ் போன்ற தொழிற்சாலைகளிலும் மின்சார அரங்கிலும் தனியாகவும் கூட்டாகவும் இதுபோன்ற இயக்கங்கள் நடைபெற்றுள்ளன. இதர அமைப்புகள் ஊசலாடிய நேரங்களிலும் அவர்களை ஒன்றி ணைத்து நிறுத்தி, இந்த போராட்டங்களை வெற்றிபெறச் செய்ய முடிந்துள்ளது.

கைத்தறி, விசைத்தறி, பனியன் மற்றும் சிறுதொழிலுடமை யாளர்களோடு சேர்ந்தும் உடமையாளர்களின் போராட்டங் களுக்கு ஆதரவு தெரிவித்தும் புதிய பொருளாதார கொள்கைக்கு எதிரான இயக்கங்களில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளோம். இருப்பினும், சிறு தொழில் உடமையாளர்களோடு இணைந்து இதுபோன்ற இயக்கங்களை நடத்துவது பற்றிய தயக்கம் இன்னமும் சில இடங்களில் நீடிக்கிறது. இது போக்கப்படுவதற்கு கவனம் செலுத்த வேண்டுமென மாநிலக்குழு கருதுகிறது.

1993ல் பஸ்களை ஓட்டி, வேலைநிறுத்தம் பிசுபிசுத்தது என அறிவித்து அரசு திருப்திப்பட்டுக் கொண்டது. 1994ல் பஸ்களை அரசே நிறுத்திவிட்டதோடு, அண்ணா தொழிற்சங்கப் பேரவை, வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதாக அதிகாரபூர்வமாக அறிவித்தது. புதிய பொருளாதார கொள்கையினால் மக்களிடையே ஏற்பட் டுள்ள எதிர்ப்பும் அரசியல் நிலையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களும் இதற்கு காரணமாகும்.

இந்த வேலைநிறுத்தங்களில் ஏஐடியுசி, எல். பி. எப் மற்றும் பல் வேறு சிறிய அமைப்புகளும் சிஐடியுவோடு கூட்டாக செயல்பட் டுள்ளன. 1994 செப்டம்பர் வேலைநிறுத்தத்தில் ஐஎன்டியுசி மற் றும் காங்கிரஸ் தலைமையிலுள்ள அமைப்புகள் தவிர அனைத்து அமைப்புகளும் அதிகாரபூர்வமாக வேலைநிறுத்தத்திற்கு ஆதர வான நிலையை மேற்கொண்டன. தலைமை எடுத்த நிலைக்கு மாறாக, ஐஎன்டியுசி தொழிலாளர்கள் பல இடங்களில் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டனர். திமுகவின் ஊசலாட்டமான அரசியல் நிலைபாடு காரணமாக 1994 செப்டம்பர் 29 வேலை நிறுத்தத்தில் எல். பி. எப். பங்கேற்பு பலகீனமானதாக இருந்தது. நெய்வேலியிலும் வேறு சில இடங்களிலும் வேலைநிறுத்தத்திற்கு எதிராக பிரச்சாரம் செய்யும் அளவிற்கும் சென்றனர்.

ஒட்டுமொத்தமாக பார்த்தால்,

புதிய பொருளாதாரக் கொள்கைக்கு எதிராக தொழிலாளர் களையும் இதர பகுதி உழைப்பாளி மக்களையும் ஒன்றுதிரட்டுவ தற்கு முன்முயற்சி எடுத்து செயல்பட நம்மால் முடிந்துள்ளது. ஆலை மட்ட உணர்வு நிலையிலிருந்து நாடுதழுவிய இயக்கங்கள் என்ற மட்டத்திற்கு உணர்வு நிலைமை ஓரளவு உயர்த்துவதற்கு இந்த வேலைநிறுத்தங்கள் பயன்பட்டுள்ளன.

இருப்பினும்,

★ நமது சங்கங்களின் உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் இந்த போராட்டங்களில் பங்கேற்காத நிலை தொடருகிறது.

★ சில அரங்கங்களில், நமது சங்கம் மட்டுமே போராட்டத்தில் பங் கேற்கும் நிலை ஏற்படும் போது பங்கேற்பு மேலும் குறைகிறது.

★ 1994 செப்டம்பர் வேலைநிறுத்தத்தில் கோவை உட்பட இதர பகுதிகளில் பஞ்சாலைகளில் வேலைநிறுத்த பங்கேற்பு மிகவும் குறைவாக இருந்தது. ஐஎன்டியுசி, எச். எம். எஸ். , என். எல். ஒ. ஆகிய இ.காங்கிரஸ் தலைமையிலான அமைப்புகள் பங்கேற் காததும், பங்கேற்பதாக அறிவித்த அமைப்புகளின் ஊசலாட்ட மும், இந்த அரங்கத்திலுள்ள நமது பலவீனமும் இதற்கு காரண மாக இருந்தாலும், சூழ்நிலைக்கு ஏற்ப நடைமுறை தந்திரங்களை உருவாக்குவதற்கு தவறியுள்ளோம். முந்தைய வேலைநிறுத்தங் களில் பஞ்சாலைகளில் வேலைநிறுத்த பங்கேற்பு குறைவா கவே இருந்தது.

★ மின்வாரியத்திலுள்ள சிபிஐ தலைமையிலான சங்கமும், மத்திய அரசு ஊழியர்களிடையே உள்ள அவர்களது ஆதரவு அமைப்பு களும் பொது நடவடிக்கையில் ஒன்றுபட மறுத்து வருவது அந்த அரங்கங்களில் பிரச்சனைகளை உருவாக்குகின்றன.

★ துறைமுகம், ரயில்வே மற்றும் சில பெரிய தொழிற்சாலைகளில் இந்த வேலைநிறுத்தங்கள் எந்த பிரதிபலிப்பையும் ஏற்படுத் தாத நிலை தொடருகிறது.

அணி திரட்டப்படாத தொழிலாளர்களின் வேலைநிறுத்தம்

புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவுகளுக்கு எதிராக நடைபெற்ற இயக்கத்தின் ஒரு பகுதியாகவும் சட்டப் பாதுகாப்பு உட் பட கோரிக்கைகளை வலியுறுத்தியும் அணிதிரட்டப்படாத தொழி லாளர்களின் நாடுதழுவிய வேலைநிறுத்தம் 1993 ஜூலை 14 அன்று நடைபெற்றது. சிஐடியுவின் முடிவுக்கேற்ப நடைபெற்ற இந்த வேலைநிறுத்தத்திற்கு நல்ல தயாரிப்புகள் மாநிலம் முழுவதும்

நடைபெற்றன. ஒன்றரை லட்சம் தொழிலாளர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் பங்கேற்றனர். இவர்களில் மூன்றில் ஒருபகுதிக்கும் குறைவானவர்கள் மட்டுமே நமது சங்க உறுப்பினர்கள். இதை யொட்டி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான கையெழுத்து இயக்கத்தில் 75,000 தொழிலாளர்களிடம் கையெழுத்து பெறப் பட்டது.

அணிதிரட்டப்படாத தொழிலாளர்களை திரட்டுவதின் முக்கி யத்துவம் பற்றி மாநில அகில இந்திய மாநாடுகளில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தத்தில் சிறு அளவிலான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இருந்தாலும், மாவட்டக்குழுக்கள் விசேஷ கவனம் செலுத்தி, ஸ்தாபன ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இந்த தொழிலாளர்களில் பெரும்பகுதியினர் அதிமுகவின் ஆதரவாளர்களாக உள்ளதை நாம் கவனத்தில் கொள்ள வேண் டும். திட்டமிட்டு பணியாற்றினால் இவர்களை அரசியல் ரீதியாக வும் நாம் வென்றெடுக்க முடியும். ஜாதீய அமைப்புகளும் தீவிர வாத குழுக்களும் இவர்களிடையே ஊடுருவி வருவதையும் நாம் கணக்கிலெடுக்க வேண்டும்.

வகுப்புவாத எதிர்ப்பு இயக்கம்

வகுப்புவாத சக்திகளுக்கு எதிரான போராட்டம் என்ற நமது கட்சி காங்கிரஸ் வகுத்துள்ள மற்றுமொரு முக்கிய கடமையை நிறை வேற்றுவதற்கு கூடுதலான முயற்சிகள் தேவைப்படுகின்றன.

'அணைக்க வேண்டிய தீ' எனும் பிரசுரம், 1,75,000 பிரதிகள் அச்சிடப்பட்டன. தோழர் அ. சவுந்திரராஜன் எழுதிய இந்த பிரசுரம் நல்ல வரவேற்பைப் பெற்றது. பிரசுர எண்ணிக்கை ஒரு சாதனையென சொல்லலாம். ஆனால் 50% பிரதிகள் போக்கு வரத்து அரங்கத்திலேயே விற்பனை செய்யப்பட்டது என்பதைப் பார்க்கின்றபோது, நமக்குள்ள வாய்ப்புகளை நாம் முழுமையாக பயன்படுத்தவில்லை என்பது தெளிவாகிறது.

கோவை மாவட்டத்தில் சிஐடியுவின் சார்பில் இரண்டு கருத் தரங்கங்கள் நல்லமுறையிலான மக்கள் பங்கேற்போடு நடை பெற்றது.

பாபர் மசூதி உடைக்கப்பட்டதை எதிர்த்து 1992 டிசம்பர் 10 அன்று, நடைபெற்றபொதுவேலைநிறுத்தத்திற்கும் கடையடைப் பிற்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் மாநில அரசும் ஆதரவு

அளித்திருந்த நிலையிலும், நெய்வேலி லிக்னைட் நிறுவனம், மதுரை கோட்ஸ் போன்ற பல ஆலைகள் இயங்கியதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். தொழிற்சங்க இயக்கத்தின் பலவீனமான நிலையை இது எடுத்துக்காட்டுகிறது.

இதர போராட்டங்கள்

போக்குவரத்து அரங்கில் ஊதிய உயர்வுக்கான போராட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முன்கூட்டியே திட்டமிட்டு, நல்ல தயாரிப்போடு இந்த இயக்கம் நடைபெற்றது. ஊதிய ஒப்பந்தத்துடன், இதர நலன்களுக்கு பாதகமில்லாமல் பென்ஷன் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. நமக்கு கிடைத்த குறிப்பிடத்தக்க வெற்றியாகும். பென்ஷன் கோரிக்கை பற்றிய சில அம்சங்களை அரசு ஏற்க மறுத்ததால், நாம் இந்த ஒப்பந்தங்களில் கையெழுத்திடவில்லை. ஆனால் ஒப்பந்தத்தில் ஏற்படுத்த முடிந்த முன்னேற்றங்களை விளக்கிக்கூறி, நமது ஆட்சேபணைகளை தொழிலாளர்களுக்கு எடுத்துரைத்தோம். நல்லதொரு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதில் சிஐடியுவின் பங்கு குறித்து தொழிலாளர்கள் புரிந்து கொண்டனர். இதையொட்டி நடைபெற்ற நன்கொடை வசூலில் நமது சங்கங்களுக்கு 9. 25 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது இதை எடுத்துக் காட்டுகிறது.

போக்குவரத்து அரங்கில் நடைபெற்ற மற்றுமொரு முக்கிய வேலைநிறுத்தம் 1993 நவம்பர் 2 முதல் 7 வரை நடைபெற்ற போனஸ் போராட்டமாகும். தொழிலாளர்களின் உணர்வுகளை தட்டி எழுப்ப திட்டமிட்டு பிரச்சாரம் செய்ததும், அதற்கேற்ப வேலைநிறுத்தத்திற்கு முடிவு செய்ததும் பெரும் வீச்சோடு போராட்டம் நடத்திட உதவியது. ஆளும் கட்சி தொழிலாளர்கள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். பேச்சுவார்த்தையே இல்லையென்று அறிவித்த அரசை பேச்சுவார்த்தை நடத்தச் செய்யவும் சில மாறுதல்களை அறிவிக்கவும் செய்ய வைத்தது. 1993ம் ஆண்டு போராட்டத்தின் பயனாக 1994ம் ஆண்டு போனசில் குறிப்பிடத்தக்க உயர்வு ஏற்படுத்த முடிந்தது.

மின் அரங்கில் நிரந்தர தொழிலாளர்களுக்காகவும், காண்ட்ராக்ட் தொழிலாளர்களுக்காகவும் நமது சங்கம் தொடர்ந்து பல போராட்டங்களை நடத்தி வந்துள்ளது. 1993 அக்டோபரில் காண்ட்ராக்ட் தொழிலாளர்களின் மாநிலம் தழுவிய வேலைநிறுத்தம்

நாட்கள் நடைபெற்றது. இந்த போராட்டத்தையொட்டி நிரந்தர தொழிலாளர்களும் ஒரு நாள் வேலைநிறுத்தம் செய்தனர்.

காண்ட்ராக்ட் தொழிலாளர்களின் பிரச்சனைகளில் மின் ஊழியர் மத்திய அமைப்பு முன்னுதாரணமாக செயல்பட்டு வருகிறது. 18,006 காண்ட்ராக்ட் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்தவும் மேலும் 11,000 ஐ. டி. ஐ. படித்த இளைஞர்களுக்கு வேலை கிடைக்கவும் வழி வகுத்துள்ள காலித் கமிஷன் தீர்ப்பை பெறுவதிலும், உச்சநீதிமன்றம் வரை தொடர்ந்து வழக்காடி தீர்ப்பை உறுதிப்படுத்துவதிலும், இதுவரையிலும் 4000க்கும் மேற்பட்டோரை நிரந்தரப்படுத்துவதிலும், நமது பணி குறிப்பிடத்தக்கதாகும். காண்ட்ராக்ட் தொழிலாளர்களை திரட்டி ஸ்தல மட்ட போராட்டங்களும் மாநிலம் தழுவிய இயக்கங்களும் தொடர்ச்சியாக நடைபெற்றுள்ளன. 1994 ஜூலை 18ல் சென்னையில் நடைபெற்ற மறியலில் 8000 தொழிலாளர்கள் பங்கேற்றனர். இவர்களில் ஒருபகுதியினர் நமது சங்க உறுப்பினர்களாக இல்லாதவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

காண்ட்ராக்ட் தொழிலாளர்கள் மாநிலம் தழுவிய வேலைநிறுத்தத்தையொட்டி தூத்துக்குடி அனல்மின்நிலைய காண்ட்ராக்ட் தொழிலாளர்கள் மீது கடுமையான அடக்குமுறை ஏவி விடப்பட்டது. 321 தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டனர். அனல்மின்நிலைய காண்ட்ராக்ட் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு கிடைத்த பின்னர், விநியோகப் பிரிவிலும் அதுபோன்ற ஊதிய உயர்வு உட்பட கோரிக்கைகளை முன்வைத்து நடத்தப்பட்ட வேலைநிறுத்தத்தில், அனல்மின் நிலைய தொழிலாளர்களையும், தொடர்வேலைநிறுத்தத்தில் ஈடுபடுத்தியிருக்கக்கூடாது என்று பின்னர் நடைபெற்ற பரிசீலனையின்போது முடிவு செய்யப்பட்டது. மின் ஊழியர்களின் ஊதிய உயர்வுக்கான நடவடிக்கைகளை நாம் துவக்கியதோடு, அனைத்து முக்கிய சங்கங்களையும் கொண்ட கூட்டு இயக்கமும் நடைபெற்றது. காண்ட்ராக்ட் தொழிலாளர்களின் நிரந்தரம் கோரி போராடிக் கொண்டிருக்கையில் 52,000 காலியிடங்களை ரத்து செய்து மற்ற சங்கங்கள் ஒப்பந்தம் போட்டதை நாம் ஏற்க மறுத்தோம். அதோடு இந்த அரங்கில் கூட்டு நடவடிக்கைகளும் முறிந்துவிட்டது. நிலைமையை மாற்ற நமது தோழர்கள் தொடர்ந்து முயற்சித்து வருகிறார்கள்.

பஞ்சாலைத் தொழிலாளர்களின் மாநிலம் தழுவிய கூட்டு வேலைநிறுத்தம், 1992 டிசம்பர் 15 முதல் 20 வரையிலும் நடை

பெற்றது. ஊதிய உயர்வு கோரி நடைபெற்ற இந்த வேலைநிறுத்தம் முன் எப்போதும் இருந்திராத வீச்சோடு நடைபெற்ற போராட்ட மாகும். ஏ.டி.பி. தலைமையின் அறிவிப்பை மீறி அவர்களது தொழி லாளர்கள் பங்கேற்றனர். அரசு உத்தரவுப்படி இடைக்கால நிவா ரணம் வழங்கப்பட்டது. பிறகு பேச்சுவார்த்தைகளின் மூலம் பெரிய ஆலைகளுக்கான ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. சிறிய ஆலைகள் பற் றியும் ஒப்பந்தம் ஏற்படும் நிலை உள்ளது. ஊதியப் பிரச்சனை நீதி மன்றத்திற்கு விட்ட பிறகும், ஒருபகுதி நிர்வாகத்தினர் பேச்சு வார்த்தை நடத்த முன்வந்தபோது அதை ஏற்றுக்கொண்டோம்.

ஆலைவாரியாக பல பஞ்சாலைகளில் போராட்டம் நடைபெற் றுள்ளது. இதில், 1992ல் மதுரையில் கோட்ஸ் ஆலையில் நடை பெற்ற 54 நாள் வேலைநிறுத்தம் குறிப்பிடத்தக்கதாகும். ஐ.என்.டி. யு.சி ஒரு ஒப்பந்தம் போட்டால் அதுவே இறுதியானது என்ற நிலை உடைக்கப்பட்டது. நாம் முன்னின்று செயல்பட்டதனால் உறுப்பி னர் எண்ணிக்கையும் சற்று உயர்ந்தது.

மாநில ரீதியான போராட்டங்கள், கிளர்ச்சிகளையொட்டி சர்க் கரை, பீடி, தோல்பதனிடும் தொழிலாளர், அரசு கனிம நிறுவனம் போன்ற பல ஊதிய உயர்வு ஒப்பந்தங்களையும் இந்த காலத்தில் போட்டுள்ளோம்.

படிப்பினைகள்

கடந்த மூன்று ஆண்டுகள் நடைபெற்ற மாநில ரீதியான முக்கிய போராட்டங்களை சிஐடியுவின் மாநிலக்குழுவும், அரங்கவாரியான அமைப்புகளும் பரிசீலனை செய்துள்ளது. இது கடந்த காலங்களை ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். ஆனால் நடை பெற்ற பரிசீலனைகளை கீழ்மட்டம் வரை கொண்டு செல்வதில் உள்ள பலவீனம் தொடருகிறது. இந்த பரிசீலனைகளின்போது காண முடிந்த முக்கிய தன்மைகள் வருமாறு:

★ ஒன்றுபட்ட இயக்கங்களை மேலும் வலுப்படுத்துவதற்கு வாய்ப்புகள் உள்ளன. குறிப்பாக, தொழில் நெருக்கடிகள் முற்றி வரும் நிலையில் இதற்கு வாய்ப்புகள் அதிகமாகும்.

★ அரசியல் ரீதியான காரணங்களுக்காக தலைமையானது ஒன்று பட்ட இயக்கங்களுக்குத் தடையாக நின்றாலும், தொழிலாளர் களிடம் பிரச்சனைகளை திட்டமிட்டு கொண்டுசென்றால், தொழிலாளர்களின் ஒற்றுமையை உருவாக்க முடியும். இதில், பஞ்சாலை ஊதிய உயர்வு போராட்டமும், போக்குவரத்து அரங்க போனஸ் போராட்டமும் நல்ல படிப்பினைகளாகும்.

★ இந்தப் போராட்டங்களையொட்டி, தொழிலாளர்களுக்கு அரசியல் உணர்வு ஊட்டுவதற்கு திட்டமிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக சொல்லமுடியாது. போராட்டக் காலத்தில் அரசியல் மேடையிலிருந்து நமது நிலைபாட்டை தெளிவுபடுத்துவதும், தேவைப்படும்போது வேறுபடுத்திக் காட்டுவதும் அவசியமாகும்.

★ போராட்ட படிப்பினைகளை நமது சங்க உறுப்பினர்கள் மட்டுமல்லாது, பொதுவாக தொழிலாளர்களிடம் கொண்டு செல்வதும் அவசியமாகும்.

ஸ்தாபன பணிகள்

தஞ்சை மாநாட்டின் முடிவின் அடிப்படையிலும், சிஐடியுவின் அகில இந்திய ஸ்தாபன பரிசீலனை அடிப்படையிலும், ஸ்தாபன நிலைமைகளில் முன்னேற்றம் காண இந்தகாலத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மாநில டி.யு. சப்கமிட்டி இறுதிப்படுத்திய அறிக்கையின் அடிப்படையில், தர்மபுரியில் 1992 ஜூலையில் நடைபெற்ற மாநிலக்குழு தொழிற்சங்க அரங்கம் பற்றி விவாதித்தது. ஆனால், அந்த விவாதத்தின் அடிப்படையிலான அறிக்கை இறுதிப்படுத்தப்படாமல் விடப்பட்டது. இருப்பினும், இந்த விவாதத்தின் பின்னணியில், மாவட்டங்களில் அமைப்பு ரீதியான மாற்றங்கள் சில அமுலாக்கப்பட்டன.

மாநில மாநாடு

சிஐடியுவின் ஸ்தாபன பணிகளில் முன்னேற்றம் காண வேண்டுமென்ற நோக்கத்தோடு 1992ம் ஆண்டுகளில் மாவட்ட மாநாடுகளும் 1993 ஏப்ரல் மாதத்தில், சேலத்தில் மாநில மாநாடும் நடைபெற்றது.

மாவட்ட மாநாடுகளின்போதே உழைக்கும் பெண்களின் மாவட்ட மாநாடுகளும் நடைபெற்றன.

போக்குவரத்து, மின்சாரம், ரயில்வே, பஞ்சாலை, சர்க்கரை, குடிநீர் அரங்க மாநாடுகளும் நடைபெற்றுள்ளன. பஞ்சாலை சம்மேளன மையத்தை கோவையிலிருந்து சென்னைக்கு மாற்றினோம்.

அணி திரட்டப்படாத தொழில்களில் கைத்தறி, பீடி, கட்டுமான அரங்க மாநாடுகள் நடைபெற்றுள்ளன. பீடி அரங்கில் 10 வருடங்களாக மாநாடு நடைபெறாததில் சிஐடியு மாநில மையமும் கட்சி

மையமும் தலையிட்டு மாநாடு நடத்தி, புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாவட்ட மாநாடுகளிலும் அரங்க மாநாடுகளிலுமாக 7000க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். உழைக்கும் பெண்களின் மாவட்ட மாநாடுகளில் 1784 பேர் கலந்து கொண்டனர். மாநாடுகளையொட்டி நடைபெற்ற பேரணிகளில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தப் பின்னணியில் நடைபெற்ற சிஐடியுவின் மாநில மாநாட்டில், ஸ்தாபனம் பற்றி தனியாக 8 மணி நேரத்திற்கும் மேல் விவாதம் நடைபெற்றது. விவாதம் திருப்தியளிப்பதாக அமையவில்லையென்றாலும், ஸ்தாபன பரிசீலனையின் நல்ல துவக்கமாக அமைந்தது.

1994 பிப்ரவரியில் நடைபெற்ற அகில இந்திய சிஐடியு மாநாட்டின் பின்னணியிலும், சேலம் மாநாட்டு முடிவின் அடிப்படையிலும் மாவட்டங்களில் மாநில மாநாட்டுக்கு பிறகுள்ள ஸ்தாபன நிலைபற்றி பரிசீலனை மேற்கொள்ளப்பட்டது. இதற்கென ஒரு கேள்வித்தாள் தயாரிக்கப்பட்டு, மாவட்டப் பரிசீலனைகளும், இதைத் தொடர்ந்து மாநில ஸ்தாபன பரிசீலனையும் நடத்தப்பட்டு அறிக்கை இறுதிப்படுத்தப்பட்டு மாநிலக்குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாநில சிஐடியு

1) தஞ்சை மாநாட்டிற்கு பிறகு மாநில மையம் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. தோழர் பி. எம். குமார் மாநில சிஐடியு மையத்திற்கு மாற்றப்பட்டார். மாநில மையத்திலிருந்து செயல்படும் டி.கே.ஆர்., ஏ.கே.பி., பி.எம்.கே., கே.வி., எஸ்.சி. ஆகியோரும் ஆர்.யு.வும், ஏ.எஸ்., டி.ஜே., பி.வி.ஆர். ஆகிய மூன்று முக்கிய பொறுப்பாளர்களும் கொண்ட மாநில மையம் செயல்படுகிறது. சராசரியாக 10 நாட்களுக்கு ஒருமுறை மையக்கூட்டம் நடைபெறுகிறது. பெரும்பான்மையான கூட்டங்களில் அனைவரும் பங்கேற்கும் நிலை உள்ளது.

2) மாநில நிர்வாகிகளுக்கு வேலைப்பிரிவினை செய்யப்பட்டுள்ளது. ஓர் ஆண்டு பரிசீலனையின் அடிப்படையில் இந்த வேலைப்பிரிவினைகளில் சில மாறுதல்களும் செய்யப்பட்டன. ஒவ்வொரு நிர்வாகிக்கும், முக்கிய அரங்கங்கள் / மாவட்ட

பொறுப்புகளுடன் அணிதிரட்டப்படாத தொழில் ஒன்றுக்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

3) மாநில நிர்வாகிகள் கூட்டம், மாநிலக்குழு கூட்டங்கள், மாவட்ட செயலாளர்கள் கூட்டம் முறையாக நடத்தப்பட்டுள்ளது. இந்த கூட்டங்களில் 70 முதல் 90 சதம் வரையிலான தோழர்கள் கலந்து கொள்கிறார்கள். எழுத்து மூலம் அறிக்கை வைப்பதும் பரிசீலிப்பதும் தொடருகிறது. மாவட்ட வேலைகளை பற்றி குறித்தகாலத்தில் அறிக்கை வருவதில் உள்ள பலகீனம் தொடருகிறது.

4) ரயில்வேயில் பிராந்திய ரீதியான சங்கமும், மின்வாரியத்தில் மாநில சங்கமும், போக்குவரத்து, பஞ்சாலை, சர்க்கரை, குடிநீர் வடிகால் வாரியமும், ஸ்தல ஸ்தாபனம், கைத்தறி, பீடி, கட்டுமானம், ஆட்டோ ஆகிய அரங்கங்களில் சம்மேளனங்களும் மத்திய பொதுத்துறை, விசைத்தறி, தோல் - தோல்பொருள் உட்பட சில தொழில்களில் ஒருங்கிணைப்பு குழுக்களும் உள்ளன.

இந்த சம்மேளனங்கள், மாநில மையத்துடன் இணைந்து செயல்படுவதிலும், குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

உறுப்பினர் எண்ணிக்கை

உறுப்பினர் எண்ணிக்கையில் 1992ம் ஆண்டு நிலையிலிருந்து சிறு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1994ம் ஆண்டு கணக்குகள் முடிக்கப்பட்டால், 20% உயர்வு இருக்கும் என மாவட்டக் குழுக்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுவாக தெரிவிக்கப்படும் உறுப்பினர் எண்ணிக்கை அடிப்படையில் 'ஈ' பாரங்களும் இணைப்பு கட்டணங்களும் முழுமையாக அளிக்கப்படுவதில்லை. இதனால் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக 1,70, 000 என்ற அளவிலேயே உறுப்பினர் எண்ணிக்கை உள்ளது. 1995 பிப்ரவரியிலும் கூட 1993ம் ஆண்டிற்கான "ஈ" பாரங்களும் இணைப்புக் கட்டணமும் அளிக்காத ஒரு சில சங்கங்கள் உள்ளன.

முக்கிய தொழில்களில் உள்ள தேக்கமான நிலை தொடருகிறது. சில தொழில்களில் உள்ள நலிவு, தாமாக ஓய்வுபெறும் திட்டங்கள், ஓய்வு பெற்றவர்களுக்கு பதிலாக நியமனம் இல்லாததும் ஓரளவு பாதித்துள்ளது. இந்த துறையிலுள்ள தேக்கத்தை உடைக்க கூடுதல் கவனத்துடன் முயற்சி தேவைப்படுகிறது.

நமது முக்கிய சங்கங்களாக உள்ள போக்குவரத்து, மின்சாரம் ஆகிய அரங்க சங்கங்கள் சிஐடியுவில் அந்தஸ்தை உயர்த்தியுள் ளன. போக்குவரத்து அரங்கில் 25,000ம், மின் அரங்கில் காண்ட் ராக்ட் தொழிலாளர்கள் உட்பட 24,000ம் உறுப்பினர்கள் உள்ள னர். மின் அரங்கில் நிரந்தர தொழிலாளர்களிடையே (10,000) தேக்கமான நிலை தொடருகிறது.

இந்த இரண்டு அரங்கங்களிலும் கூட கழக / மாவட்ட வாரியான ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. ரயில்வேயில் பல்முனைத் தாக்குதல் களுக்கு இடையே உறுப்பினர் எண்ணிக்கை, இடைக்காலத்தில் சற்று குறைந்து மீண்டும் பழைய நிலையை (10, 000) எட்டியுள்ளது. இந்த உயர்வும் முன்னேற்றமும் சென்னையை ஒட்டியே உள்ளது. பஞ்சாலைகளில் (12,000) சில மாவட்டங்களில் சற்று உயர்வு ஏற் பட்டாலும் கோவையில் தேக்கம் தொடருகிறது. சர்க்கரை அரங் கில் சமீபகாலமாக தொடர்புகள் அதிகப்பட்டு, சம்மேளன செயல் பாட்டிலும் முன்னேற்றம் இருந்தாலும் உறுப்பினர் எண்ணிக்கை யில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லை, உறுப்பினர்கள் 2500. குடிநீர் வடிகால் வாரியத்தில் மாநில சம்மேளனம் செயல்படுகிறது. உறுப்பினர் எண்ணிக்கை 1750. மத்திய பொதுத்துறை நிறுவனங் களிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் இல்லை.

உறுப்பினர் சேர்ப்பில் உயர்வு ஏற்படுவதற்கு அணிதிரட்டப் படாத தொழில்களில் கூடுதல் கவனம் செலுத்துவதென முடிவு செய்யப்பட்டதில் 1994ல் சற்று முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. கைத்தறி, விசைத்தறி, பீடி, கட்டுமானம், தோல் - தோல்பொருள், பனியன், ஆட்டோ போன்ற தொழில்களில் இன்றுள்ள தொடர்பு களையும் ஸ்தாபனத்தையும் விரிவுபடுத்த சம்பந்தப்பட்ட மாவட் டங்கள் விசேஷ முயற்சி எடுத்தால் பெரும் முன்னேற்றம் காண முடியும். ஸ்தல ஸ்தாபன தொழிலாளர்களை கிராமங்களிலிருந்து மாநகராட்சி வரையிலுமாக அணிதிரட்ட நல்ல வாய்ப்புள்ளது. தோட்டத் தொழிலில் இதுவரையிலும் எந்த முன்னேற்றமும் காண இயலவில்லை. கட்டுமானம், ஆட்டோ ஓட்டுனர்கள் ஆகியவற்றில் சமீபகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட கூடுதல் முயற்சிகள் பலன ளித்துள்ளது.

மாவட்டக் குழுக்களின் செயல்பாடுகள்

'மாநிலக் குழுக்கள், மாநில கவுன்சில் மற்றும் கீழ்மட்டத்தில் இயக்கங்களை ஒருங்கிணைக்கும் சங்கங்கள் ஆகியவற்றுக் கிடையே மிக முக்கியமான கண்ணியாக மாவட்டக் குழுக்கள்

விளங்குகின்றன. சிஐடியுவினால் அகில இந்திய அளவிலும், மாநில அளவிலும் மேற்கொள்ளப்படும் அனைத்து முடிவுகளையும் மாவட்டங்களில் நிறைவேற்றும் பொறுப்பும் மாவட்டக்குழுக் களையே சேர்ந்ததாகும்' என சிஐடியுவின் அகில இந்திய ஸ்தாபன அறிக்கை கூறுகிறது.

மாவட்ட சிஐடியு கமிட்டிகளை செயல்படுத்த பல முயற்சிகளை சிஐடியுவின் மாநிலக்குழு இந்த காலத்தில் எடுத்துள்ளது. அது போதுமானது அல்ல என்பது உண்மைதான். மாவட்டக் குழுக்க ளின் செயல்பாட்டை அதிகரிக்க பொறுப்பை உணரவைக்க வெகு தூரம் செல்ல வேண்டியதாகவே கருதுகிறோம்.

சிஐடியு மாவட்ட மாநாடுகளுக்கு பிறகு, மாவட்ட மையங்களை உருவாக்க முயற்சி நடைபெற்றது. பெரும்பான்மையான மாவட்டங் களில் இவ்வாறான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டாலும், ஒருசில மாவட்டங்களில் மட்டுமே அதை உறுதிப்படுத்த முடிந்துள்ளது. மிகப்பெரும்பான்மையான மாவட்டங்களில், தொடர்ச்சியான செயல்பாடு இல்லை.

மாவட்டக்குழுக்கள் பற்றி கீழ்க்காணும் பிரச்சனைகளில் உடனடியான கவனம் தேவையாகிறது.

அ. மாவட்டத்தில் தொழிற்சங்க அரங்கில் பணியாற்றும் தோழர் களுக்கு இதை முதன்மையான பணியாக செய்ய உத்தரவாதம் செய்வது;

ஆ. செயல்படக் கூடிய மாவட்ட மையத்தை உருவாக்குவது, தொழில்ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த மாவட்டங்களில் குறைந்தபட்சம் இருவர், இதர மாவட்டங்களில் ஒருவர் என நிர்ணயிப்பது;

இ. மாவட்ட ரீதியாக வளர்ச்சி காண்பதற்காக முடிவு செய்யப்பட்ட அரங்கங்களில் கூடுதல் கவனம் செலுத்தி உறுப்பினர் எண் ணிக்கையில் முன்னேற்றம் காண்பது; இவைகளை நிறை வேற்ற புதிய பகுதிநேர ஊழியர்கள், முழுநேர ஊழியர்களை பொறுப்பேற்க ஏற்பாடுகள் செய்வது;

ஈ. சிஐடியுவின் மாவட்டக் குழுக்களுக்கென்று தனி அலுவலகம் 9 மாவட்டங்களில் உள்ளது. இல்லாத பெரிய மாவட்டத்தில் தனி யாக அலுவலகமும், மைய செயல்பாட்டிற்கான நிதி ஏற்பாடு களையும் உத்தரவாதப்படுத்துவது;

உ. தொழிற்சங்க பணிகளை முக்கிய பணியாக செய்துவரும் தோழர்களின் பணிகளை மாறுதல் செய்யும்போது, ஏற்படக் கூடிய பாதிப்புகளைப் பற்றி முன்கூட்டி விவாதித்து அதை கணக்கில் எடுத்து முடிவு செய்வது;

ஊ. தொழிற்சங்கங்களில் ஜனநாயகபூர்வமான செயல்பாடுகளை உத்தரவாதம் செய்யும் முறையில் சங்கங்கள் நடத்தப்படுவதற்கு வழிகாட்டுவது, கண்காணிப்பது, தவறு செய்பவர்கள் மீது நட வடிக்கை எடுக்கும்போதும் அதை ஜனநாயகபூர்வமாக செய் வது; இது மிகவும் முக்கியமானதாகும்.

'தொழிற்சங்கங்களை வெகுஜன அரங்கங்களாகவே கருத வேண்டும். அவைகளைக் கட்சியின் இணைப்புகளாக கருதக்கூடாது. சங்கமும், அதன் செயல்பாடும் சுதந்திரமான தாக இருக்கச் செய்யவேண்டும். அப்போதுதான் சகல பகுதி தொழிலாளர்களையும் ஈர்க்க முடியும்' என கட்சியின் ஆவ ணங்கள் கூறுகின்றன. இன்றைய நமது செயல்பாடு, இதை முழுமையாக உணர்ந்ததாக கூறமுடியாது.

எ. இணைக்கப்பட்ட சங்கங்களுக்கு போதுமான அளவிற்கு தொடர்ச்சியான வழிகாட்டுதல்கள் உத்தரவாதம் செய்ய வேண்டும். ஏதாவது பிரச்சனை வந்தால் உதவுவது என்ற நிலை மாற்றப்பட வேண்டும். மாவட்ட தலைமைக்கும், சங்க தலைமைக்கும் இடைவெளி உள்ளது அகற்றப்பட வேண்டும்.

ஈ பாரங்கள் இணைப்புக் கட்டணங்கள்

ஒவ்வொரு ஆண்டும் கணக்கு முடித்து ஏப்ரல் 30க்குள் அரசுக்கு 'ஈ' பாரங்கள்ள சமர்ப்பிப்பதில் கவனமில்லாத நிலை தொடரு கிறது. ஏப்ரல் 3 என்ற காலக்கெடு நிறைவேறாமலிருப்பதால், அரசு கணக்குகளில் நமது உறுப்பினர் எண்ணிக்கை குறைந்துவிடுகிறது. தொடர்ச்சியாக எச்சரித்த பின்னரும் 1989ம் ஆண்டு அடிப்படை யிலான வெரிபிகேஷனுக்கு ஆவணங்களை வழங்காத பல சங் கங்கள் இருந்தன. இதனால் 30, 000 உறுப்பினர்கள் நமது கணக்கில் குறைவு ஏற்பட்டது. அகில இந்திய மாநில இணைப்புக் கட்ட ணங்கள் ஒவ்வொரு ஆண்டும் முறையாக கட்டாமலிருப்பது தொட ருகிறது.

கட்சியின் மாவட்ட கமிட்டி கவனம் செலுத்த வேண்டிய பிரச்ச னையாக இது உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31ந்தேதிக்குள் ஈ பாரத்தை முடித்து அரசுக்கு அனுப்புவது, ஜூன் மாதத்திற்குள்

அகில இந்திய மாநில இணைப்புக் கட்டணத்தை அனுப்புவதும் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்.

இதர சங்கங்கள் குறித்து

தமிழ்நாட்டில் பெரும்பகுதி தொழிலாளர்கள் சீர்திருத்தவாதிகள் பிடிப்பில் உள்ளனர். பல்வேறு தொழில்களில் 40 சதம் எந்த சங்கத்திலும் உறுப்பினராக இல்லாத நிலை தொடருகிறது. அணி திரட்டப்படாத தொழில்களில் சங்க உறுப்பினர்கள் மிக மிகக் குறைவு. உறுப்பினர் எண்ணிக்கையில் ஐஎன்டியுசி சங்கம் தான் முழுமையான சங்கமாக உள்ளது. நாம் இரண்டாவது இடத்தில்தான் உள்ளோம். 1967க்கு பின் அரசியல் ரீதியாக ஒவ்வொரு தேர்த லிலும் காங்கிரஸ் பலகீனப்பட்டாலும் தொழிற்சங்க அரங்கில் பல கீனப்படவில்லை. பல கட்சியை சார்ந்தவர்கள் அதில் உறுப்பின ராக உள்ளனர். இவர்கள் நடத்தும் சங்கத்தில் ஜனநாயகம் இல்லை என்றாலும் தொழிலாளர்கள் அதை உணருவதில்லை. ஐ.என்.டி. யு.சி மற்றும் இதர சீர்திருத்தவாத அமைப்புகள் செயல்பட நிர்வா கங்கள் முழுமையாக ஒத்துழைப்பு தருகிறது. செக் - ஆப், வேலைக்கு ஆள் எடுத்தல், சில்லரை சலுகைகள் போன்றவற்றின் மூலம் வாழ முடிகிறது. திமுக, அதிமுக அரசுகளும் நிர்வாகத்துடன் இணைந்து ஐஎன்டியுசி-யைப் பாதுகாத்து வந்துள்ளது. இன்று நிலைமை மாறி வருகிறது. நாம் வைக்கும் கோரிக்கைகளை அவர்களும் வைக்கி றார்கள். வேலைநிறுத்தத்திற்கான அறைகூவலை விடுகின்றனர். இவைகளை நாம் கணக்கில் கொள்ள வேண்டும்.

தொமுச, ஏஐடியுசி, ஏடிபி, எச்எம்எஸ், எம்எல்எப் என அமைப்பு களை வரிசைப்படுத்தலாம். சென்னை, கோவை, ஹோசூர் போன்ற பகுதிகளில் குசேலர் போன்ற தலைவர்கள் செயல்படுகி றார்கள். இவர்கள் செல்வாக்கை குறைத்து மதிப்பிடக்கூடாது.

இந்த காலத்தில் தொமுசவில் பிளவு ஏற்பட்டுள்ளது. அரசிய லில் ஏற்பட்ட தாக்கம் தொழிற்சங்கத்தில் பிரதிபலிக்கவில்லை யென தெரிகிறது. திமுக வழிகாட்டுதலில் உள்ள தொமுச வலுவாக உள்ளது. அங்கீகரிக்கப்பட்ட தலைவர்கள் தொமுசவில் உள்ளதும் காரணமாக இருக்கலாம். நம்மை பொறுத்தவரை அனைத்து சீர் திருத்தவாத அமைப்புகளின் பின் உள்ள தொழிலாளர்களுடன் இணக்கமான தொடர்புகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். தலைமையின் போக்கை விமர்சிக்கும் போது, உறுப்பினர்களை நம் பக்கம் வெல்லக்கூடிய முறையில் நமது அணுகுமுறைப் பேச் சுக்கள் இருக்க வேண்டும்.

இங்கும் பிரச்சனை என்னவென்றால் சீர்திருத்தவாத அமைப் புகள் பிளவுபடும்போது தொழிலாளர்கள் வேறு சீர்திருத்தவாத அமைப்புக்கு சென்றுவிடுகின்றனர். கடந்த காலத்தில் ஐஎன்டியுசி, எல்பிஎல்-ல் பிளவு ஏற்பட்ட போதும் தொழிலாளர்கள் என்எல்ஓ, அண்ணா தொழிலாளர் பேரவை, மறுமலர்ச்சி தொழிலாளர்கள் அமைப்புக்குத்தான் சென்றார்கள். தமிழகத்தில் நாம் தொடர்ச்சி யாக சந்திக்கும் பிரச்சனையாகவே இது உள்ளது. குறுகிய காலத் தில் இதில் மாற்றம் கொண்டுவர வேண்டும்.

தொழிற்சங்கத்தில் சீர்திருத்தவாத தலைவர்கள் தவறு செய் தாலும் அதன் உறுப்பினர்கள் அதை பெரிதுபடுத்துவதில்லை. பெரும்பான்மையான தொழிலாளர்கள் தான் சார்ந்துள்ள அரசி யல் கட்சியின் தலைமைக்குக் கட்டுப்பட்டுள்ளனர்.

சீர்திருத்தவாத அமைப்பில் உள்ள தொழிலாளர்களையும் எந்த சங்கத்திலும் உறுப்பினராக இல்லாத தொழிலாளர்களையும் நம் பக்கம் வெல்ல நாம் எந்த விசேஷ முயற்சிகளையும் எடுத்ததாகச் சொல்லமுடியாது. அவர்களை உதவாக்கரை என ஒதுக்கும் போக்கு நம்மிடம் உள்ளது. வர்க்கம் முழுவதையும் நம்பக்கம் வெல்ல வேண் டும் என்ற பார்வை இல்லை எனலாம்.

ஜாதீய மதவாத அமைப்புக்கள் செயல்பாடு

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் இன்று தொழிலாளர்கள் ஜாதீய ரீதியாக திரளுகின்றனர். குறிப்பாக, பொதுத்துறை சென் னையில் உள்ள சில பெரிய தனியார் ஆலைகள் ஜாதிய அமைப் புக்களை உருவாக்கியுள்ளது. இது மிகவும் ஆபத்தானது. வன்னி யர்கள் பாட்டாளி சங்கமாக செயல்படுகிறார்கள். எஸ். சி. / எஸ்டி அமைப்புகள் உள்ளன. ஜாதீய அமைப்புக்களை உருவாக்கிக் கொண்டு சீர்திருத்தவாத சங்கங்களுக்கு சந்தாவும் கொடுக்கின் றனர். சங்க தேர்தல்களிலும், இதர அமைப்புகளுக்கான தேர்தல் களிலும் இது பிரதிபலிக்கிறது. பி. எம். எஸ். அமைப்பு தமிழகத்தில் இடம்பிடிக்க கடுமையான முயற்சி செய்கிறது. வகுப்புகள் நடத்தப் படுகின்றன. சில பஞ்சாலை இன்ஜினீயரிங், பனியன், கைத்தறி, விசைத்தறி முதலாளிகள் இவர்களை ஆதரித்து ஊக்குவிக்கின் றனர். தோட்டப் பகுதிகளில் கிறிஸ்துவ மெஷனரிகள் செயல்படு கின்றனர். ஐ.பி.எப், எல்யுசிஐ அமைப்புகள் சில இடங்களில் செயல்படுகின்றன.

மேலே குறிப்பிட்டுள்ள அமைப்புகள் ஒன்றுபட்ட தொழிலா ளர்கள் இயக்கத்தை குலைக்க திட்டமிட்டு செயல்படுகின்றன.

நம்மை குறிவைத்து தாக்குகின்றனர். இவர்களைப் பற்றி சந்தர்ப்பம் வரும் போதெல்லாம் அம்பலப்படுத்த வேண்டும்.

வகுப்புகள்

அரசியல் வகுப்புகள், தொழில்நுட்ப வகுப்புகள் என பிரிவுகளாக வகுப்புகள் நடத்த மாநில சிஐடியு திட்டமிட்டது.

புதிய பொருளாதாரக் கொள்கையின் முக்கிய அம்சங்களை மாநிலத்திலுள்ள முன்னணியினருக்கு எடுத்துக்கூறும் முறையில், பொருளாதாரத்துறை வல்லுநர் ஒருவர் மூலம் நூறு தொழிலாளர்களுக்கு முழுநாள் வகுப்பு நடத்தப்பட்டது. இதேபோன்று பாலன்ஷீட் பற்றிய இரண்டு நாள் வகுப்பும் முன்னணியினருக்காக நடத்தப்பட்டது.

மின் அரங்கில், மாநிலம் முழுவதுமுள்ள முன்னணி ஊழியர்களுக்கு 2 நாள் வகுப்புகள் நடைபெற்றன. இதில் 1200 தோழர்கள் கலந்துகொண்டுள்ளனர். போக்குவரத்து அரங்கில், மாநிலம் தழுவிய வகுப்புகளுக்கு திட்டமிடப்பட்டது. எனினும் சென்னையில் மட்டுமே நடைபெற்றது. இதர அரசியல் பணிகள் தொடர்ச்சியாக ஏற்பட்டதால், ஆசிரியர்களை நிர்ணயிக்க இயலாமல் போய் விட்டது.

சர்க்கரை சம்மேளனம் சார்பில் இருமுறை, மாநில ரீதியான 2 நாள் வகுப்புகள் நடைபெற்றது.

பஞ்சாலை சம்மேளன சார்பில் இருமுறையாக 100 தோழர்களுக்கு 'சித்ரா' மூலம் 2 நாள் பயிற்சி வகுப்பும், மாநில ரீதியாக முன்னணியினர் 125 பேர் 2 நாள் அரசியல் மற்றும் தொழிலாளர் சட்டம் பற்றிய வகுப்புகளும் நடைபெற்றன. புதுவையிலும் பஞ்சாலை முன்னணியினருக்கு ஒரு நாள் அரசியல் வகுப்பு நடைபெற்றது.

ரயில்வே சங்கமும் மாநில ரீதியாக திட்டமிட்டு சில வகுப்புக்களை நடத்தியுள்ளது. மாநில மாநாட்டு முடிவுகள், அகில இந்திய மாநாட்டு முடிவுகள், அகில இந்திய ஸ்தாபன அறிக்கை விளக்கம் என மாநில ரீதியாக சிஐடியுவின் சார்பில் ரிப்போர்ட்டுக்கள் நடைபெற்றுள்ளது.

இது தவிர, மாவட்ட ரீதியாக பல வகுப்புகள் நடைபெற்றாலும் நமது தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கு இந்தப்பணியை நடத்த முடியவில்லை.

பத்திரிகை, பிரசுரங்கள்

சிஐடியு செய்தி (14,500), போக்குவரத்து தொழிலாளர் (30, 000), மின்கதிர் (5,000), தொழிலரசு (1000) என பத்திரிகைகளை தொடர்ந்து வெளியிட முடிந்துள்ளது. நமது சங்க உறுப்பினர்களுக்கும் மேலாக 5000 பிரதிகள் போக்குவரத்து தொழிலாளி விற்பனையாவது குறிப்பிடத்தக்கதாகும். இதர பத்திரிகைகளில் விற்பனையில் மேலும் பெருமளவிற்கு முன்னேற்றம் காண வாய்ப்புள்ளது. திட்டமிட்டு முயற்சித்த இடங்களில் இந்த முன்னேற்றம் காண முடிந்துள்ளது. மத்தியதர வர்க்க அரங்கிலுள்ள நமது தோழர்களும் மாத இதழ்களை வெளியிட்டு வருகிறார்கள்.

வகுப்புவாத எதிர்ப்பு பிரசுரம் தவிர வேறு பிரசுரங்கள் சிஐடியுவின் சார்பில் வெளியிடப்படவில்லை.

அகில இந்திய ஸ்தாபன அறிக்கை தமிழில் 3000 பிரதிகள் வெளியிடப்பட்டுள்ளது. அரங்க பிரச்சனைகளை பற்றி பஞ்சாலை, பீடி, மின்சாரம், போக்குவரத்து, குடிநீர் வடிகால் வாரிய அமைப்புகள் பிரசுரங்களை வெளியிட்டுள்ளன. பிரசுர வெளியீடுகளில் கூடுதலான கவனம் தேவைப்படுகிறது.

உடனடியாக அன்றாட பிரச்சனைகளோடு இணைந்து கீழ்க்காணும் கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.

1. நமது தலைமையிலுள்ள தொழிற்சங்கங்களின், குறிப்பாக சிஐடியுவின் உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்த மாவட்ட வாரியாக தனி முயற்சிகள் மேற்கொள்வது. இதற்கென அடிப்படை தொழில்களிலும், அணிதிரட்டப்படாத தொழில்களிலும் முன்னுரிமை நிர்ணயித்து செயல்படுவது.
2. இன்றைய தேவைக்கேற்ற அரசியல் வகுப்புகள், தொழில்நுட்ப வகுப்புகள் நடத்துவது, பிரச்சார வெளியீடுகளைக் கொண்டு வருவது, அரங்கப் பத்திரிகைகளில் விற்பனையை பெருக்குவது.
3. சிஐடியுவின் மாவட்ட மையங்களை செயல்படும் மையங்களாக மாற்றுவது, மாவட்ட குழுக்களின் பணிகளில் முன்னேற்றம் காண்பது.
4. சங்கங்களின் அன்றாடப் பணிகளில் முன்னேற்றம் காண்பது, ஜனநாயகபூர்வ செயல்பாடுகளை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுப்பது.

விவசாய அரங்கம்

விவசாயத் தொழிலாளர்கள் இயக்கம்

விவசாயத் தொழிலாளர்களுக்கென்று பத்தம்ச கோரிக்கை சாசனம் தயாரிக்கப்பட்டு அதன் மீது வட்ட மற்றும் ஒன்றிய சிறப்பு மாநாடுகளும், மாநில சிறப்பு மாநாடுகளும் நடத்தினோம். மாநிலத்தில் சாத்தியமான அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட பேரணிகள் நடத்திடவும், மாநிலம் தழுவிய அளவில் மறியல் நடத்திடவும் திட்டமிடப்பட்டு இவ்வியக்கங்கள் பொதுவாக வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

கோரிக்கை சாசன விளக்கப் பிரச்சாரம் 12 மாவட்டங்களில் நடைபெற்றது. 110 குழுக்களாக 637 தோழர்கள் கலந்துகொண்ட இந்தப் பிரச்சாரக்குழு தமிழகத்தில் 991 கிராமங்களில் நடைபெற்றது. 13 மாவட்டங்களில், வட்ட ஒன்றிய அளவில் 55 மாநாடுகளும், 6 பேரவைகளும் நடந்தன. இவைகளில் 889 பெண்கள் உட்பட, 6,330 பேர் கலந்துகொண்டனர். 12 மாவட்ட தலைநகர்களில் நடைபெற்ற பேரணியில் 12,312 பேர் கலந்துகொண்டனர்.

மறியலில் 4,491 பெண்கள் உட்பட 19, 000 தோழர்கள் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இயக்கம் நல்ல பிரதிபலிப்பை ஏற்படுத்தியது என்பதுடன் தமிழகத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கான மாநில இயக்கம் நடத்தப்பட்டது. இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

பெண் விவசாயத் தொழிலாளர் இயக்கம்

ஜனநாயக மாதர் சங்கமும், விவசாயத் தொழிலாளர் சங்கமும் சேர்ந்து நடத்திய பெண் விவசாயத் தொழிலாளர்கள் சிறப்பு மாநாடுகளும் இக்காலத்தில் திட்டமிட்டு நடத்தப்பட்ட - நல்ல பிரதிபலிப்பை உருவாக்கிய இயக்கமாகும். நாகை, தென்னாற்காடு வள்ளலார், விழுப்புரம் - ராமசாமி படையாச்சி, தஞ்சை, திருச்சி, மதுரை ஆகிய மாவட்டங்களில் இத்தகைய சிறப்பு மாநாடுகள் நடத்தப்பட்டன.

கூலி உயர்வுக்கான போராட்டங்கள்

நாகை, தஞ்சை, திருச்சி, மதுரை, விழுப்புரம் - படையாச்சி, தருமபுரி, சேலம், சங்ககிரி ஆகிய பகுதிகளில் கூலிக்கான வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. கூலி உயர்வு ஒப்பந்தங்களும் செய்யப்

பட்டன. இப்போராட்டங்களில் கடுமையான மோதல்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. திருச்சியில் லால்குடி தாலுகா அன்பில் கூலிப் போராட்டத்தின்போது நமது வி. தொ. ச. தலைவர் தோழர் அரசு, மாவட்ட வி. தொ. ச. தலைவர் சந்திரன் மற்றும் சேட்டு ஆகிய தோழர்களை வைக்கோல் போரீல் இட்டுத் தீ வைக்க நடந்த முயற்சியும், தலைவர்கள் கடைசி நேரத்தில் தப்பித்ததையும் அறிவோம். எனினும், நமது சக்திக்கும், வாய்ப்புக்கும் ஒப்பிட்டால் கூலி உயர்வுக்கான வேலை நிறுத்தங்கள் நடைபெற்றது மிகக் குறைவே.

பல மாவட்டங்கள் இத்தகைய முயற்சியே செய்யவில்லை என்பதும், பலமுறை மாநில மையத்திலிருந்து வலியுறுத்தப்பட்டும் நடைபெறவில்லை என்பதும் இப்பகுதி மக்களைத் திரட்டுவதில் நமக்குள்ள உணர்வு நிலைக் குறைபாட்டையே காட்டுகிறது.

நிலவரி எதிர்ப்புக்கூட்டு இயக்கம்

வெள்ள நிவாரணக் கோரிக்கைகளுக்காகவும், டீசல் விலை உயர்வு, நிலவரி, நீர்வரி, கூடுதல் வரி ஆகியவற்றை எதிர்த்து நாமும், சி.பி.ஐ. சங்கமும் சேர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டங்களை மார்ச் 94ல் நடத்தினோம்.

நமது சங்கத்தின் சார்பில் 10,000க்கும் மேற்பட்டவர்களை இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு திரட்ட முடிந்தது. பத்திரிக்கைகள் இந்த இயக்கத்தையும், கோரிக்கையையும் விரிவாக பிரசுரித்தன. விவசாயிகள் மத்தியிலும் நல்ல வரவேற்பு பெற்றது.

இந்த இயக்கத்தைத் தொடர்ந்து கூடுதலான நிலவரியைக் கட்ட வேண்டாம் என்ற அறிவிப்பும் இரு சங்கங்களின் சார்பில் வெளியிடப்பட்டது.

நிலவரி வசூல் ஒத்திவைப்பு தமிழக அரசு அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இறுதியாக கூடுதல் வரி ரூ. 2.50ஐ, 10 ஆக உயர்த்தியதை ரூ. 5 ஆகக் குறைக்கவும் செய்தனர்.

உர விலை உயர்வுக்கு எதிராக

புதிய பொருளாதாரக் கொள்கையின் ஒரு பகுதியாக உரமானியம் நீக்கப்பட்டதும், உரவிலைக் கட்டுப்பாடு நீக்கப்பட்டதும் சேர்ந்து உரத்திற்கான கடுமையான தட்டுப்பாடும் விலை உயர்வும் ஏற்பட்டது.

இது குறித்து 92, 93, 94 ஆகிய மூன்றாண்டுகளிலும் பல்வேறு வடிவங்களில் போராட்டங்கள் மாநிலக்குழுவின் அறைகூவல் அடிப்படையில் நடைபெற்றது.

12.9. 92 அன்று நாகை மாவட்டம் வந்திருந்த மத்திய அமைச்சர் மாதவ்ராவ் சிந்தியாவுக்கு கறுப்புக்கொடி காட்டிய போராட்டம், சில மாவட்டங்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த உரத்தை எடுத்து விநியோகிக்க விவசாயிகளைத் திரட்டி போராடியது, உர விலை உயர்வுக்கு எதிராக பல மாவட்டங்களில் நடைபெற்ற மறியல் ஆகியவை குறிப்பிடத்தக்க போராட்டங்களாகும்.

இந்த மறியலில் நாகை - காயிதேமில்லத் மாவட்டத்தில் 172 மையங்களில் 2,571 தோழர்கள் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட சில பிரச்சனைகளில் தலையீடு

இறால் பண்ணைகளுக்கு எதிராக: விவசாயத்தை ஏற்றுமதிக்கான விவசாயமாக ஆக்குவது என்ற கொள்கையின் விளைவாக தமிழக கடற்கரையோர பிரதேசங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இறால் பண் ணைகளாக மாற்றப்பட்டது.

டி.வி.எஸ். உள்ளிட்ட பெரும் நிறுவனங்கள், ஆளுங்கட்சி செல்வாக்குள்ள பிரமுகர்கள் இத்தகைய பண்ணைகளை அமைத் தனர். இது சுற்று வட்டாரத்து கிராமங்களின் குடிநீர் உட்பட உப்பு நீராகும் நிலையையும், ஆயிரக்கணக்கான விவசாயத் தொழி லாளர்கள் வேலையிழக்கும் அபாயத்தையும், உணவு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க பாதிப்பையும் ஏற்படுத்தியது.

ஆரம்பத்தில் 'சர்வோதயா' இதற்கு எதிரான இயக்கத்தை நடத்தியது. எனினும்ஒரு கட்டத்திற்கு பிறகு, நாம் தலையிட்ட பின்னரே இயக்கம் சூடுபிடித்தது. இறால் மீன் பண்ணைகளால் ஏற்படும் அபாயத்தை விளக்கி கட்டுரைகள், கண்டன அறிக்கைகள், உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டங்கள் என்ற வகையில் நாம் தலையிட்டோம். நமது தலையீடு தமிழக அரசை இது குறித்து ஓர் ஆய்வுக்குழு அமைக்கவும், மேற்கொண்டு பண்ணைகள் விஸ்தரிக்கப் படாது என வாக்குறுதி அளிக்கவும் நிர்ப்பந்தித்தது.

தேயிலை விலை வீழ்ச்சி: வெளிநாடுகளில் இருந்து தேயிலை இறக்குமதி செய்ததன் விளைவாக கடந்த ஆண்டு தேயிலை விலை கடும் வீழ்ச்சி ஏற்பட்டது. சாதாரணமாக கிடைக்கும் விலையில் 3ல் 1 பங்குகூட கிடைக்காமல் தேயிலை விவசாயிகள் குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான சிறு விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

மாநில மையத் தலையீட்டின் பேரில் நமது நீலகிரி மாவட்ட சங்கம் இப்பிரச்சனையில் தலையிட்டது. தாமதமான தலையீடு எனினும் இப்பிரச்சனையில் தனியாகவும், கூட்டாகவும் நாம் நடத்திய பெருந்திரள் ஆர்ப்பாட்டங்கள் ஓரளவு பலன் கொடுத்தது.

கடும் விலை வீழ்ச்சியிலிருந்து ஓரளவு நிவாரணம் கிடைப்பதற்கு இந்த இயக்கங்கள் பயன்பட்டது. எனினும் இப்படி ஏற்பட்ட புதிய தொடர்புகளை ஸ்தாபனப்படுத்தி நம் பக்கம் வைத்துக் கொள்ள நமது முயற்சி மிகக் குறைவே.

கொள்முதல் - ஊக்கத் தொகை வலியுறுத்தி இயக்கம்: கடந்த இரண்டாண்டு காலமாக கட்டாயக் கொள்முதல் என்பதை தமிழக அரசு அறவே கைவிட்டுவிட்டது. ஊக்கத் தொகையும் நிறுத்தப்பட்டது. மாநில அரசின் கையில் தேவைக்கு அதிகமாக நெல் கையிருப்பு இருக்கிறது என்ற பெயரில் இது செய்யப்பட்டது.

இதன் விளைவாக டெல்டா பகுதி விவசாயிகள் நெல்லுக்கு உரிய விலையில்லாமல் கடும் பிரச்சனைக்கு ஆளாக்கப்பட்டார்கள். இதுபற்றி கூட்டாகவும், தனியாகவும் ஆர்ப்பர்ட்டங்கள் நடத்த மாநில மையத்தின் அறைகூவல் அடிப்படையில் நாகை, தஞ்சை, தென்னாற்காடு, திருச்சி மாவட்டங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

குறிப்பாக, நாகை மாவட்டத்தில் இதையொட்டி நடைபெற்ற மறியல் போராட்டத்தில் பணக்கார விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டதும், ஒரு வாரம் சிறைத்தண்டனை பெற்றதும் குறிப்பிடத்தக்கது. இப்பிரச்சனையில் அரசைப் பின்னுக்குத்தள்ள இயலவில்லை என்றாலும், நெல் கொள்முதல் குறித்து நமது தலையீடும், பங்கேற்பும் இதர பகுதி விவசாயிகள் மத்தியில் ஒரு பிரதிபலிப்பை ஏற்படுத்தியது என்பதில் ஐயமில்லை. நாகையில் இந்த மறியலில் 2,500 பேர் கைதாயினர். இதில் பெரும்பகுதி நமது சங்கத்தினரே.

பாசன பிரச்சனைகளில் தலையீடு

பாசனப் பிரச்சனை உட்பட பன்முகப் படுத்தப்பட்டுள்ள விவசாயப் பிரச்சனைகளில் நமது இயக்கம் தலையிட வேண்டும் என்பது விவசாய அரங்கத்தில் நமது கடமை எனும் 'தஸ்தாவேஜ்' வலியுறுத்தும் முக்கியமான அம்சமாகும்.

இவ்வகையில் இக்காலத்தில் பாசனப் பிரச்சனைகளில் நமது தலையீடு குறிப்பிடத்தக்க அளவில் இருந்துள்ளது. உலகவங்கி

உதவியுடன் நிறைவேற்றப்படும் பாசன மேம்பாட்டுத் திட்டத்தில் நமது சங்கமும், பங்கேற்க வேண்டுமென்று வழிகாட்டப்பட்டு, பாசன சங்கங்களில் நமது ஊழியர்கள் பங்கேற்கின்றனர்.

தஞ்சை, நாகையில் கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் வேண்டும் என நடத்தப்பட்ட ஹர்த்தால் உள்ளிட்ட போராட்டம், மதுரை மாவட்டத்தில் குறிப்பிட்ட கால்வாய்கள் வேண்டுமென வலியுறுத்தி நடத்தப்பட்ட தொடர் இயக்கம், திருச்சி லால்குடி தாலுகாவில் பாசன வாய்க்கால் பராமரிக்கப்பட்டு திட்டமிடப்பட்ட மறியல் இயக்கம், சிதம்பரத்தில் பாசனப் பிரச்சனையில் நடைபெற்ற மறியல் இயக்கம் போன்றவை இதர பல்வேறு கட்சிகளைச் சார்ந்த, சாராத ஆயிரக்கணக்கான விவசாயிகளை நமது தலைமையில் போராட்டத்தில் ஈர்க்க முடிந்தது என்பது இக்காலத்தில் ஏற்பட்ட செழுமையான அனுபவம் ஆகும்.

இதே போல் மதுரை - மேலூர் தாலுகாவில் பயிர் நஷ்டம் காரணமாக வரி ரத்து கோரி நாம் நடத்திய போராட்டமும், பல அரசியல் இயக்கங்களைச் சார்ந்த பல்வேறு கிராமங்களைச் சேர்ந்தவர்கள், போராட்டத்தில் மட்டுமின்றி பின்னர் சங்கத்தில் உறுப்பினராகும் அளவுக்கும் வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

முகவை, ராமநாதபுரம், காமராஜர், நெல்லை, பெரியார் உள்ளிட்ட சில மாவட்டங்களிலும் இக்காலத்தில் குறிப்பிட்ட பாசனப் பிரச்சனைகள் எடுக்கப்பட்டன. இந்தப் போராட்டங்கள் மக்கள் மத்தியில் சூடாக இருக்கும் பிரச்சனையில் உரிய நேரத்தில் செய்யப்படும் சரியான தலையீடு - கட்சி வித்தியாசமில்லாமல் பல தரப்பு மக்களை ஈர்க்கும் சக்தி பெற்றதாக அமைகிறது என்பதையும் ஓரளவு நிவாரணமும் பெற்றுத்தர முடிகிறது என்பதை எடுத்துக் காட்டும் நல்ல அனுபவங்களாகும்.

டங்கல் எதிர்ப்பு இயக்கம்

டங்கல் திட்டத்தை எதிர்த்தும், நிவாரண உதவிகளை வலியுறுத்தியும் நாடு தழுவிய அளவில் நடைபெற்ற இயக்கத்தில் தமிழகத்தில் சக்தியாக நடத்த முயற்சித்ததோடு சுமார் 180 மையங்களில் சிபிஐ சங்கத்துடன் டிச. 9, 1994 நடத்தப்பட்ட இவ்வியக்கத்தில் நம் சார்பில் 13,000 பேர் கலந்துகொண்டனர். மாவட்டங்களில் இத்திட்டம் குறித்து கருத்தரங்கு நடத்த திட்டமிட்டபடி நடத்த இயலவில்லை.

ஸ்தல இயக்கங்கள்

கடந்த மாநாட்டு கடமைகளில் ஒன்றாக ஸ்தல இயக்கங்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுத்து விவசாயிகளை பாதிக்கின்ற பல் வேறு பிரச்சனைகளில் வலுமிக்க ஸ்தல போராட்டங்களை நடத் திட வேண்டுமென்று தீர்மானித்தோம். இக்கடமையை நிறை வேற்ற இக்காலத்தில் மாநில, மாவட்டக்குழுக்கள் நல்ல முறையில் கவனம் செலுத்தியது.

இத்தகைய போராட்டங்களில் ஆயிரக்கணக்கான விவ சாயிகள் கட்சி, ஜாதி வித்தியாசமின்றி கலந்துகொண்டார்கள் என்பதும், இப்போராட்டங்களில் எடுத்து வைக்கப்பட்ட கோரிக் கைகள் பலவும் அரசால் ஏற்கப்பட்டு ஓரளவு நிவாரணம் அறி விக்க வேண்டிய அவசியம் எழுந்ததும் குறிப்பிடத்தக்க அம்ச மாகும்.

இக்காலத்தில் இத்தகைய ஸ்தல கோரிக்கைகளை வலியுறுத்தி ஒரே நாளில் குறிப்பிட்ட மாவட்டம் முழுவதும் பல கிராமங்களில் உண்ணாவிரதம் இருப்பது என்ற முயற்சி எடுக்கப்பட்டது.

இவ்வகையில் மாநிலம் முழுவதும் இரண்டு முறை நடத்தப்பட்ட உண்ணாவிரத இயக்கமும், ஒவ்வொரு முறையும் 1000க்கும் மேற் பட்ட மையங்களில் நடைபெற்றது என்பதும், 50, 000க்கும் மேற் பட்டோர் இந்த உண்ணாவிரத இயக்கங்களில் பங்கேற்றனர் என்பதும் இக்காலத்தில் இவ்வரங்கில் எடுக்கப்பட்ட முயற்சிக்கு கிடைத்த நல்ல பலன் ஆகும்.

இப்படி முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் சில உடனடியாக அரசு அதிகாரிகள் தலையிட்டு தீர்க்க வேண்டி வந்ததும் குறிப் பிடத்தக்கது. எனினும், ஸ்தலக் கோரிக்கைக்கான இயக்கங்களில் தொடர்ச்சியின்மை என்பதும், அப்படி போராட முன்வரும் மக் களை ஸ்தாபனப்படுத்துவதிலும் நமது கடுமையான பலவீனம் தொடர்ந்தது.

மலைவாழ் மக்கள் சங்கம்

கடந்த மாநாட்டு கடமைகளில் ஒன்றாக தமிழகத்தில் உள்ள 5 லட்சத்திற்கும் மேற்பட்ட மலைவாழ் மக்களுக்கென தனி ஸ்தா பனம் காண வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. 1992ம் வருடம் மலைவாழ் மக்களின் சிறப்பு மாநாடு கொல்லிமலையில் நடத்தப் பட்டு, மாநில அமைப்பு உருவாக்கப்பட்டது. தோழர் பி. சண் முகத்தை செயலாளராகக் கொண்ட மலைவாழ் மக்கள் சங்க மாநி

லக்குழு அமைக்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மாநில அளவில் 15,000 உறுப்பினர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பன்முகப் பிரச்சனைகள்

விவசாயம் வேகமாக முதலாளித்துவ மயப்படுத்தப்படுவதைத் தொடர்ந்தும், விவசாய உற்பத்தி என்பது பிரதானமாக விற்பனைக்காக என்று ஒரு தொழில் போல் மாநிலத்தின் பல பகுதிகளில் ஏற்பட்டு வருவதைத் தொடர்ந்தும் இக்காலத்தில் விவசாயிகளின் பகுதிபகுதியாக தங்கள் கோரிக்கைகளுக்கு ஒன்றுபட வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டுள்ளது. இவ்வகையில் ஏற்கெனவே கரும்பு விவசாயிகளுக்கென தனிச் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டு பல ஆலைகளில் செயல்பட்டு வருகிறது. இக்காலத்தில் பட்டு விவசாயிகளுக்கென்று ஒரு தனிச்சங்கம் அமைக்கப்பட்டு அவர்களுடைய பிரச்சனைக்கென தனி இயக்கங்களும் நடத்தப்பட்டு சில கோரிக்கைகள் நிறைவேறவும் செய்தன.

சமீபத்தில் அரசு வேளாண்மை பண்ணைத் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இத்தகைய உணர்வைக் கணக்கில் கொண்டு அவர்களுக்கென தனியாக வேளாண்மை பண்ணைத் தொழிலாளர் அமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பொழுது கொடிக்கால் விவசாயிகள், கரும்பு வெட்டு தொழிலாளர்கள், மீனவர்கள், பால் உற்பத்தியாளர்கள் ஆகிய பகுதியினர் மத்தியிலும் தனிச்சங்கம் உருவாக்கப்பட வேண்டும் என்ற நிலை உருவாகி சில மாவட்டங்களில் இதற்கான அமைப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

இத்தகைய பகுதியினருக்கு தனி அமைப்புகள் காண வேண்டியுள்ளது. இவற்றில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மற்றும் விவசாயத் தொழிலாளர் சங்கங்களுடன் இணைந்து செயல்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இத்தகைய தேவைகள் நமக்கு ஏற்கெனவே உள்ள ஊழியர் பற்றாக்குறையை மேலும் தீவிரமாக்கியுள்ளது என்பதை கவனத்தில் எடுப்பதும் அவசியமாகிறது.

ஊழியர் பயிற்சி

இக்காலத்தில் ஊழியர் பயிற்சிக்கு விசேஷ கவனம் செலுத்தப்பட்டது. ஓரிரு மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட வகுப்புகள் நடத்தப்பட்டது. 2,000க்கும் மேற்பட்டவர்கள் இவ்வகுப்புகளில் பங்கேற்றனர். மலைகள் தோறும் வகுப்புகள் என்பது துவங்கப்பட்டு இதுவரை 4 மலைகளில் நடந்து முடிந்துள்ளது.

மாநில அளவில் தமிழ்நாட்டு விவசாய நிலையில் உள்ள விசேஷ பிரச்சனைகள் குறித்தும் நமது கொள்கைத் திட்டம், ஸ்தாபனம் பற்றியும், மாநில பயிற்சி முகாம் மகாபலிபுரத்தில் நடத் தப்பட்டது. 200 தோழர்கள் கலந்துகொண்டனர். இவ்வகுப்பு குறிப்புகளை முறைப்படுத்தி மீண்டும் மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய கடமையை செய்ய வேண்டியுள்ளது.

உழவன் உரிமை

கடும் போராட்டங்களுக்கு இடையே உழவன் உரிமை தொடர்ந்து வெளியிடப்படுகிறது. இக்காலத்தில் இருமுறை சந்தா சேர்ப்பு இயக்கம் நடைபெற்றது. இந்த இயக்கங்கள் உழவன் உரிமை எண்ணிக்கை கீழே போகாமலும், பாக்கிகள் வசூலிக்க வும் பயன்பட்டதேயொழிய பெருமளவு எண்ணிக்கையை உயர்த்துவதற்கு உதவவில்லை. 5,000 முதல் 6,000 என்பது இன் றைய சர்குலேஷன் நிலைமை. தரத்தில் முன்னேற்றம் செய்ய முயற்சி எடுக்கப்பட்டது. ஓரளவு முன்னேற்றம் உண்டு.

கடந்த மாநாடு, விற்பனையை 10, 000க்கு உயர்த்த வேண்டு மென்று தீர்மானித்தகடமை நிறைவேற்றப்படாமலேயே இருக் கிறது. நமது இயக்கத் தொடர்புகளுக்கும், பத்திரிக்கை விற்பனைக் கும் பெரும் இடைவெளி நீடிக்கிறது.

பிரசுரங்கள்

இக்காலத்தில் சில பிரசுரங்கள் வெளியிடுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டது. தஞ்சை மாவட்ட இயக்கத்தின் ஆரம்ப நாட்களை விளக்கும் வண்ணம் தோழர் பி. எஸ். தனுஷ்கோடி அவர்களின் அனுபவத்தை மையமாகக் கொண்டு வெளியிடப் பட்ட நூல் 3,000 விற்கப்பட்டது. நல்ல வரவேற்பையும் பெற்றது.

- டங்கல் திட்டம் பற்றிய பிரசுரம் 60,000 அச்சாகி விற்கப்பட்டது.
- 'வெண்மணித் தீ' எனும் பிரசுரமும் விவசாயத் தொழிலாளர் சாசனமும் முறையே 3,000, 50, 000 அச்சடித்து விற்கப்பட்டது.
- இது தவிர தோழர் நவகவி எழுதிய வெண்மணி பற்றிய கவிதையும் நமது முன்முயற்சியால் அன்னம் பிரசுரத்தார் மூலம் அச்சாகி விநியோகிக்கப்பட்டது.

இந்தப் பிரசுரங்களைத் தொடர்ந்து வேறு சில பிரசுரங்களுக் கான தயாரிப்பும் மாநில மையத்தில் செய்யப்பட்டது. எனினும், பிரசுர பாக்கி பெருமளவில் மாவட்டங்களில் நிற்பதால் இம் முயற்சி தடைப்பட்டு நிற்கிறது.

உறுப்பினர் சேர்ப்பு

1991 - 92ல் 2,26,100 வி.ச. உறுப்பினர்களும், 1,20, 186 வி.தொ.ச. உறுப்பினர்களும் சேர்க்கப்பட்டனர். 1992- 93ல் இது 2,64,000 ஆகவும், 1,40, 000 ஆகவும் உயர்ந்தது. மீண்டும் 93-94ல், 2,40, 000 ஆகவும் 1,32,314 என்றும் ஆனது.

அதாவது, 92-93ல் உறுப்பினர் எண்ணிக்கை 84,000 ஆக உயர்ந்தது. 93-94ல் 32,000மாக குறைந்தது. மாவட்ட வாரியாக பட்டி யலை பரிசீலித்தால் ஒவ்வொரு முறையும் சில மாவட்டங்களில் முயற்சித்து உறுப்பினரைக் கூட்டுவதும் வேறு சில மாவட்டங்கள் கவனமின்மையால் உறுப்பினர் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படு வதையும் காண முடியும். மொத்தத்தில் கடந்த மாநாட்டு காலத்தில் 3,46,000 ஆக இருந்த உறுப்பினர் எண்ணிக்கை இன்று 3,72,000 (பட்டியல் இணைப்பு).

நாம் எடுத்த முயற்சிகளுக்கும், நமக்கு முன்னுள்ள வாய்ப்புக ளுக்கும், தொடர்புகளுக்கும் உறுப்பினர் சேர்க்கப்படுவதற்கும் பெரும் இடைவெளி இருக்கிறது. உறுப்பினர் சேர்ப்பு என்பது வருடம் முழுவதும் நடைபெற வேண்டிய ஒரு பணி. ஆனால், நமக் கிருக்கும் பல்வேறு வேலைகளுக்கு மத்தியில் ஒரு குறிப்பிட்ட காலம் தீர்மானித்து நடத்த வேண்டியுள்ளது.

★ ஆனால் குறிப்பிட்ட ஒரு மாத காலத்தில் அனைவரும் இறங்கி முடிப்பது என்பது நாகை மாவட்டம் தவிர வேறு எந்த மாவட் டத்திலும் நடைமுறைப்படுத்த முடியவில்லை.

★ தீர்மானிக்கும் காலத்தில் இதர பணிகள், நிதி வசூல் என்ற வேலைகள் காரணமாக இவ்வரங்கத்திற்கென்று ஒதுக்கப்பட்ட ஊழியர்கள் கூட உறுப்பினர் சேர்ப்பு பணிகளுக்கு கிடைக்காத நிலையும் சில மாவட்டங்களில் உள்ளது.

★ 93 - 94ல் மாவட்ட, வட்ட மைய நிதித் தேவைக்காக உறுப்பினர் சந்தாவுடன் நன்கொடையும் சேர்த்து ரூ. 2 வசூல் செய்ததும், உறுப்பினர் சேர்ப்பில் சில இடங்களில் குறைவதற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டது. ஆனால், இது பாதிப்பு உண்டாக்கு மளவு காரணமாககொள்ள இயலாது. அத்துடன் மாவட்ட, வட்ட மையங்களை நடத்துவதற்காக நிதித் தேவை பூர்த்தி செய்ய இந்த ஏற்பாடு தேவைப்படுகிறது என்பதையும் காண வேண் டும்.

★ இன்றுள்ள நிலையிலேயே கூட தொடர்புடைய கிராமங்களில் மட்டுமே 5 லட்சத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களை நம்மால்

சேர்க்க முடியும். ஸ்தாபன ஏற்பாடுகளில் உள்ள கோளாறே உறுப்பினர் சேர்ப்பிற்கு பிரதான தடையாக நீடிக்கிறது.

★ மாவட்டங்களில் இவ்வரங்கத்திற்கென்று பிரத்தியேகமாக ஊழியர்கள் இல்லாததும், உறுப்பினர் சேர்ப்பில் உள்ள தேக்கத்திற்கு காரணமாக உள்ளது.

★ மாநில மையத்தின் செயல்பாட்டிலும், தலையீட்டிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நிலையிலும், உறுப்பினர் சேர்ப்பில் உள்ள தேக்கத்தை உடைப்பது பற்றி மாநாடு பரிசீலிக்க வேண்டும்.

ஸ்தாபனம்

★ தோழர்கள் ஜி. வீரய்யன், கே. வரதராசன், வி. ஏ. கருப்புசாமி, சண்முகம், டி. கிருஷ்ணராஜ் கொண்ட மாநில மையம் அமைக்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

★ இதில் தோழர் டி. கிருஷ்ணராஜ் தவிர இதர தோழர்களின் பணி மாநில மையத்திலேயே தீர்மானிக்கப்படுகிறது.

★ மாதம் இருமுறை, சில சமயங்களில் மூன்று முறை என மையக் கூட்டங்கள் நடைபெறுகிறது.

★ தேவைகளுக்கு ஏற்ப இது வலுப்படுத்தப்பட தோழர் திருநாவுக்கரசு இப்பொழுது மையத்தில் இணைக்கப்பட்டுள்ளார்.

மாநிலக்குழு கூட்டங்கள்

★ மாநில வி. ச., வி. தொ. ச., மலைவாழ் மக்கள் சங்கம் ஆகியவைகளின் கூட்டங்கள் 3 மாதத்திற்கு ஒரு முறை தொடர்ச்சியாக நடத்தப்படுகிறது.

★ மாநிலக்குழுவில் உறுப்பினர் பங்கேற்பு 90% உள்ளது.

★ பிரச்சனைகளின் மீது விவாதங்களும் கடந்த காலங்களைவிட முனைப்புடன் நடைபெறுகிறது.

★ விவாதங்களில் மாநிலக்குழு உறுப்பினர்களுக்கே கூட அவரவர் மாவட்டங்களில் அன்றாட பிரதான வேலையாக விவசாய அரங்கப் பணி இருப்பதில்லை என்பது வெளிப்படுகிறது. இது குறித்த பரிசீலனை முறையாக செய்யப்பட்டு வேலைகள் தீர்மானிப்பது எதிர்கால வளர்ச்சிக்கு பெரிதும் பயன்படும்.

மாவட்டக் குழுக்கள்

அனைத்து மாவட்டங்களிலும் விவசாய சங்கத்திற்கு, மாவட்டக் குழுவும், நாகை, தஞ்சை, திருச்சி, வள்ளலார், படையாச்சி, மதுரை ஆகிய மாவட்டங்களில் வி.தொ.ச.வுக்கென தனிக் கமிட்டியும் உள்ளது. கடந்த காலங்களில் வி.ச., வி.தொ.ச. தனியாக இருப்

பினும் கமிட்டி ஒன்றாகவே கூடும் எனும் நிலை நாகை தவிர மற்ற இடங்களில் இருந்தது. இப்பொழுது தொடர்ந்த முயற்சிகள் விளை வாக வி.தொ.ச. மாவட்டக்குழுக்கள் தனியாக கூடுவதில் குறிப் பிடத்தக்க முன்னேற்றம் உள்ளது.

உறுப்பினர் பங்கேற்பு 60 முதல் 75% என்றுள்ளது. மாவட்டக் குழு உறுப்பினர்கள், வட்டங்களில் இதர பல்வேறு வேலைகளுக்கு இடையே எப்பொழுதாவது விவசாய சங்க, விவசாயத் தொழி லாளர் சங்கப் பணிகளை செய்பவர்களாகவே பெரும்பாலான மாவட்டங்களில் நீடிக்கிறார்கள். இதன் விளைவாக இவ்வரங்கப் பணி என்பது மாவட்டத்திலும், வட்டத்திலும் ஒன்றிரண்டு ஊழியர் களைச் சுற்றி என்றாக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக பிரச்ச னைகளில் உரிய காலத்தில் தலையிடுதல், தொடர்ச்சியாக கவனித் தல் ஆகியவை சாத்தியமற்றுப் போகிறது.

வட்டக்குழுக்கள்

★ கடந்த மாநாட்டு காலத்தில் மொத்தமுள்ள 163 வட்டங்களில் குறைந்தபட்சம் வாய்ப்புடைய 50 வட்டங்களிலாவது முழு நேர ஊழியர், செயல்படும் வட்டக்குழு என்ற நிலை ஆக்க வேண்டு மென மாநாடு பணித்தது.

★ ஆனால் இந்தக் கடமை நிறைவேற்றப்படவில்லை என்பது மட்டு மன்றி இது குறித்து ஒரு சிறு முயற்சிகூட எடுக்கப்படவில்லை என்பதே உண்மை.

★ வட்டக்குழுக்கள் கூடுவது உறுப்பினர் பங்கேற்பு ஆகியவை பெரும்பான்மையான வட்டங்களில் ஏனோதானோ என்றே நடைபெறுகிறது.

★ இதன் விளைவாக மாநில-மாவட்ட மட்டத்தில் எடுக்கப்படும் சரி யான முடிவுகள் கூட அமுலாக்க வேண்டிய இடத்தில் உரிய ஸ்தாபன ஏற்பாடின்றி தொய்வடைகிறது.

கிளை அமைப்புகள்

தொடர்ந்து வலியுறுத்தலுக்குப் பிறகு உறுப்பினர் சேர்த்த இடங் களில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதி கிராமங்களில் கிளை அமைப்பு ஏற்பாடு செய்யப்படுகிறது. தலைவர், செயலாளர், நிர் வாக அமைப்பு தேர்ந்தெடுக்கப்படுகிறது.

எனினும் தொடர்ச்சியாக இந்தக் கிளைகளுக்கு சென்று கிளை நடத்தி உத்தரவாதப்படுத்தக்கூடிய வட்ட அமைப்புகள் வலுவாக

இல்லாத நிலையில் கிளை அமைப்புகள் அமைக்கப்பட்ட நிலையி லேயே நீடிக்கிறது.

எதிர்கால கடமைகள்

1. இன்று தமிழகம் முழுவதும் விவசாயத் தொழிலாளர்கள் பிரச்ச னையில் தலையிடக் கூடிய ஒரு இயக்கம் என்று நமது விவசா யத் தொழிலாளர் சங்கம் பெற்றுள்ள தோற்றத்தை உறுதிப் படுத்தி விஸ்தரிக்க வேண்டும்.

2. குடிமனைப்பட்டா, நிலச்சீர்திருத்தம், பெண்கள் கூலி உள்ளிட்ட விவசாயத் தொழிலாளர்கள் பிரச்சனைகளையும், ஏழை விவ சாயிகள் பிரச்சனைகளையும் வலியுறுத்தி மாவட்ட ரீதியாக பிரச்சார யாத்திரை அடுத்த ஓராண்டுக்குள் திட்டமிட்டு நடத் தப்பட வேண்டும்.

3. விவசாய அரங்கில் நமது கடமைகள் என்ற தஸ்தாவேஜ் அனைத்து மாவட்டங்களுக்கும் 6 மாத காலத்தில் ரிப்போர்ட் செய்வதும், மாவட்ட ரீதியான விவசாய நிலை குறித்த ஆய்வை ஓராண்டு காலத்திற்குள் முடிக்க வேண்டும்.

4. மாவட்ட மையங்கள் வலுப்படுத்தப்படுவது, குறிப்பிட்ட 50 தாலு காக்களில் செயல்படும் விவசாய சங்கத்தை உருவாக்குவது, ஜனநாயக பூர்வ செயல்பாட்டை உத்தரவாதம் செய்வது ஆகிய வற்றை தொடர்ச்சியாக கவனிக்க வேண்டும்.

5. மாநில அளவில் மகாபலிபுரத்தில் நடத்தப்பட்ட வகுப்புக்களை மாவட்ட, வட்ட அளவில் விரைவில் எடுத்துச் செல்ல வேண்டும்.

6. ஸ்தல மட்டங்களில் கூட்டு இயக்கங்கள் என்பதற்கு மிகுந்த முக்கி யத்துவம் அளித்து உயிரோட்டமுள்ள பிரச்சனைகளில் தொடர்ச்சியான தலையீடு உத்தரவாதப்படுத்த வேண்டும்.

7. பத்திரிகை விற்பனையை இரு மடங்காக்குவது, குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை முக்கியமான பிரச்சனைகளில் பிரசுரங்கள் வெளியிடுவது ஆகியவை விசேஷ கடமைகளாக ஆக்கப்பட வேண்டும்.

8. பயிர் இன்ஷூரன்ஸ் நலத் திட்டங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி நம்முடைய நடவடிக்கைத் தளங்கள் விஸ்தரிக்கப்பட வேண்டும்.

9. மீனவர்கள், மரமேறும் தொழிலாளர்கள், பண்ணைத் தொழிலாளர்கள், கரும்பு வெட்டும் தொழிலாளர்கள் என்று பகுதி வாரியான சங்கங்கள் ஏற்பட்டு வரும் வாய்ப்பை பயன்படுத்தி தலையிட வேண்டும். உருவாகியுள்ள மலைவாழ் மக்கள் இயக்கத்தை கெட்டிப்படுத்தி விஸ்தரிக்க வேண்டும்.

10. இவைகளுக்கெல்லாம் ஈடுகொடுக்கும் அளவு மாநில மையம் பலப்படுத்தப்படுவதுடன், செயல் திறனும் வளர்க்கப்பட வேண்டும். மாவட்ட மையங்கள் மற்றும் மாவட்டக்குழுக்கள் செயல்பாடுகளில் பெரும் மாற்றம் காண வேண்டும்.

வாலிபர் அரங்கம்

வருடம்	உறுப்பினர்கள்	பெண் உறுப்பினர்கள்	கிளைகள்
1991	*2,78,157*	*29,113*	*4,827*
1992	*3,44,485*	*40,277*	*4,925*
1993	*4,13,002*	*48,078*	*5,477*
1994	*4,75,729*		

மூன்றாண்டுகளில் 1,96,872 உறுப்பினர்கள் அதிகரித்துள்ளனர். சென்னை, தஞ்சை மாநாடுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் 66.8% வளர்ச்சி இருந்தது. தஞ்சை கடலூர் இடைப்பட்ட இக்காலத்தில் 70. 8% வளர்ச்சியை எட்டியுள்ளோம். வளர்ச்சியைப் பாதுகாத்து, மேலும் வளர்ச்சி வேகத்தை கூடுதலாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒட்டுமொத்தத்தில், உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதிலும் மாவட்டங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வான வளர்ச்சி உள்ளது.

உறுப்பினர் அதிகரிப்பில் மாவட்டங்களின் பங்கு

25,000 உறுப்பினர்களுக்கு மேல் அதிகரித்துள்ள மாவட்டங்கள்:

1) சென்னை 2) கோவை. இவற்றில் 58,684 உறுப்பினர்கள் அதிகரித்துள்ளனர்.

10,000 உறுப்பினர்களுக்கு மேல் அதிகரித்துள்ள மாவட்டங்கள்

1. செங்கை, 2. மதுரைநகர், 3. குமரி, 4. சேலம், 5. முகவை, 6. மதுரை புறநகர் ஆகிய ஆறு மாவட்டங்களில் 79, 963 உறுப்பினர்கள் அதிகரித்துள்ளனர்.

5,000 உறுப்பினர்களுக்கு மேல் அதிகரித்துள்ள மாவட்டங்கள்

1. வள்ளலார், 2. நெல்லை, 3. திருச்சி, 4. விழுப்புரம் ராமசாமி இவற்றில் 24,864 உறுப்பினர்கள் அதிகரித்துள்ளனர்.

மேற்குறிப்பிட்ட 12 மாவட்டங்களில் 1,63,512 உறுப்பினர்கள் அதிகரித்துள்ளனர். இவை நீங்கலாக, இதர 12 மாவட்டங்களில் 35,859 உறுப்பினர்களே அதிகரித்துள்ளனர். காமராசர் மாவட்டத்தில் 1,253 உறுப்பினர்கள் குறைந்துள்ளனர்.

நகர்ப்புறங்களில் மதுரை, சென்னை, திருப்பூர், கோவை நகரங் களில் ஓரளவு அமைப்பைக் கட்டியுள்ளோம். மற்ற நகரங்களில் பல வீனமாக உள்ளது. பல நகரங்களில் அமைப்பே இல்லாத நிலையும் உள்ளது.

தாழ்த்தப்பட்ட பகுதி இளைஞர்களிடத்தில்

சாதீய அமைப்புகளின் செயல்பாடு சமீபத்தில் அதிகரித்துள் ளது. குறிப்பாக, தாம் குறிப்பிட்டு வென்றெடுக்க வேண்டிய தாழ்த் தப்பட்ட பகுதி இளைஞர்களிடத்தில் இவை தாக்கத்தையும் ஏற் படுத்தி வருகிறது.

ஆண்டு முழுவதும் உறுப்பினர்கள் சேர்க்கப்படுகிறார்கள். குறித்த காலத்தில் குறியீட்டை முடிப்பது. கிடைக்கிற புதிய தொடர் புகளை ஸ்தாபனப்படுத்த ஆண்டு முழுவதும் முயற்சிப்பது என்கிற தன்மையில் உறுப்பினர் பதிவு நடத்தப்பட வேண்டும்.

சேர்க்கப்பட்டுள்ள உறுப்பினர்களில் பனிரெண்டு சதம் பெண் உறுப்பினர்களாவர். இளம் பெண்களை அமைப்புக்குள் கொண்டு வருவதில் சிறு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இளம் பெண்கள் கோரிக்கை மாநாடு நடத்தியது உதவி செய்தது. சேர்த்த பெண் உறுப்பினர்களை நடைபெறும் இயக்கங்களில் பங்கேற்க செய்வ தில் பலவீனம் உள்ளது. உரிய முயற்சியை மேற்கொண்டால் இளம் பெண்களை இயக்கங்களில் பங்கேற்கச் செய்திட முடியும்.

மாநிலக் குழுவில் 11 பேர் மதுரை புறநகர் நீங்கலாக அனைத்து மாவட்டக் குழுக்களிலும் பெண் தோழர்கள் கமிட்டிகளில் உள்ளனர். குமரியில் ஒரு இடைக்கமிட்டி நீங்கலாக அனைத்து இடைக்கமிட்டிகளிலும் பெண் தோழர்கள் உள்ளனர். இதுபோல பல மாவட்டங்களில் பல இடைக்கமிட்டிகளில் பெண் தோழர்கள் உள்ளனர். இது நல்ல முயற்சி. பெண் தோழர்களை கமிட்டிகளுக்கு தேர்வு செய்கிற போது, செயல்பட முடியாதவர்களை கமிட்டிக்கு எதற்கு தேர்வு செய்ய வேண்டுமென்று பலர் கேட்கிறார்கள். இது தவறான கருத்து; பெண்களை உறுப்பினர்களாக்குவது, ஊழியர் களாக்குவது, மேல் கமிட்டிகளுக்கு உயர்த்துவது தொடர்ச்சியாக நடைபெற வேண்டும்.

இளம் பெண்கள் பிரச்சனைகளுக்காக பெண்கள் மீதான கொடுமைகளை எதிர்த்து போராட்டங்கள் எதுவும் வாலிபர் சங்கம் நடத்தவில்லை. இளம் பெண்களுக்கான பிரச்சனைகள், பெண் களுக்கு இழைக்கப்படும் அநீதி போன்ற பிரச்சனைகள் மீது

வாலிபர் அரங்கம் இயக்கம் நடத்துவதன் மூலம் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும்.

நடைபெற்ற முக்கிய இயக்கங்கள் பங்கேற்பு

	பங்கேற்றோர்
1992 பிப்ரவரி 7 விலைவாசி உயர்வை எதிர்த்து தர்ணா	*7,300*
1992 ஆகஸ்ட் மாநில சைக்கிள் பிரச்சார பயணம் மாநிலம் முழுவதும் பணிகளில் ஈடுபட்டோர்	*40, 000*
1992 ஆகஸ்ட் மாநில சைக்கிள் பிரச்சார பயண இயக்கத்தில் தாலுகா அளவிலும் சேர்த்து பங்கேற்றோர்	*14,681*
1993 ஜூன் 29 நிவாரணம் நிறுத்தியதைக் கண்டித்து மறியல்	*5,675*
1994 பிப்ரவரி 14 வேலைநியமன தடை உத்தரவை எதிர்த்து அரசாணை எரிப்பு மறியல்	*12,020*
1993 ஆகஸ்ட் 19 புதிய பொருளாதாரக் கொள்கையை கண்டித்து மறியல்	*11,389*
மூன்றாண்டுகளில் நடைபெற்ற 1864 ஸ்தல இயக்கங்களில் பங்கேற்றோர்	*1,06,297*
1192 டிசம்பரில் ரேஷன் கார்டு கேட்டு (133 மையங்களில் ஆர்ப்பாட்டம்)	*40,029*
1993 டிசம்பர் 10 மருத்துவ வசதி கோரி ஆர்ப்பாட்டம் (192 மையங்களில்)	*10,011*
1992 ஜனவரி பொங்கல் தினத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற மக்கள் (557 மையங்கள்)	*2,20,000*
1993 ஜனவரி பொங்கல் தினத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற மக்கள் (749 மைங்கள்)	*3,00,000*

ஸ்தல பிரசச்சனைகளுக்காக ஓரளவு இயக்கங்கள் நடந்துள் ளன. இருப்பினும், பெரும்பகுதி கிளைகள் ஸ்தல இயக்கத்தை நடத் தாத நிலையும் உள்ளது. மக்கள் மத்தியில் கூர்மையாக முன்னுக்கு வருகிற பிரச்சனை மீது உடன் போராட்டங்களை உரிய முறையில் கொண்டு சென்றால் பலன் உண்டு. ரேஷன் கார்டு கேட்டு நடத்தப் பட்ட இயக்கத்தில் இதைப் பார்க்க முடிந்தது.

பங்கேற்பு

உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ள அளவிற்கு நடைபெறும் இயக்கங்களில் பங்கேற்பு இல்லை. பங்கேற்பில் தேக்க நிலை நீடிக்கிறது. பங்கேற்பில் உள்ள தேக்க நிலையைப் போக்கா விட்டால், வளர்ச்சியைப் பாதுகாத்து முன்னேறுவது பாதிக்கும். சேர்ந்த உறுப்பினர்களோடு மீண்டும் தொடர்பு வைப்பதில் சேர்த்த உறுப்பினர்களை அரசியல் படுத்தாததும், அவர்களை இயக்கங்களில் பங்கேற்கச் செய்வதற்கு ஸ்தாபன ரீதியில் திட்டமிட்ட முயற்சிகள் மேற்கொள்வதில் பலவீனம் நீடிக்கிறது. இப்பலவீனத்தை களைந்திட ஆக்கப்பூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பன்முக நடவடிக்கைகளில்

ஆண்டுதோறும் பொங்கல் தினத்தில், விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகிறது. இந்தாண்டில் 750 மையங்களில் விழா நடத்தப்பட்டுள்ளது. அனைத்து கிளைகளையும் பொங்கல் தினத்தில் விளையாட்டுப் போட்டிகளை நடத்திட வலியுறுத்த வேண்டும்.

மதுரை நகரில், விளையாட்டு கழகம் அமைத்து செயல்படுத்தப் படுகிறது. மாநில அளவில் பல போட்டிகளில் பங்கேற்று பரிசுகள் பெற்றுள்ளது. இதுபோல அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டு கழகங்கள் அமைத்திட வேண்டும்.

சென்னை, திருச்சி, வட ஆற்காடு, கோவை, குமரி, செங்கை, வடக்கு, மதுரை நகர், பெரியார் மாவட்டங்களில் ரத்த தான கழகம் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் 10,000 பாட்டில்கள் வரை ரத்த தானம் செய்யப்பட்டுள்ளது. இதில் சென்னை, திருச்சி மாவட்டங்களின் பங்கு குறிப்பிடத்தக்க அளவில் இருந்தது. அனைத்து மாவட்டங்களிலும், ரத்த தானக் கழகங்கள் அமைத்து செயல்படுத்த வேண்டும்.

மாநில அளவில் அம்பேத்கர் பிறந்த நாளில் கண் தான முகாம் நடத்தி 21,000 கண்கள் தானம் செய்யப்பட்டது. இது தாழ்த்தப்பட்ட இளைஞர்களிடத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றது.

தியாகிகள் தினத்தன்று 8,000 மரக்கன்றுகள் நடப்பட்டது.

சென்னையில் போதைப் பழக்கத்திற்கு எதிராகவும், எய்ட்ஸ் நோய் விழிப்புணர்வு ஓட்டமும், கருத்தரங்கமும் நடத்தப்பட்டது.

தமிழகத்தைப் புயல் தாக்கியபோது சிதம்பரனார், நெல்லை, மதுரை நகர், திருச்சி, சென்னை, வள்ளலார், குமரி மாவட்டங்களின்

தோழர்கள் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டனர். உணவுப் பொருட்கள், மருத்துவப் பொருட்கள் பல இடங்களில் வசூலித்து தரப்பட்டது. சாலை சீரமைப்பு போன்ற சமூக ஆக்கப் பணிகளில் பல கிளைகள் ஈடுபட்டுள்ளன.

இத்தகு நடவடிக்கைகள் பாராட்டுக்குரியது என்றாலும், பொது வாக பன்முக நடவடிக்கையில் வாலிபர் சங்க கிளைகள் ஈடுபடுவ தில் பலவீனம் உள்ளது.

அரசியல் படுத்துதல்

அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவில் ஒரு நாள் வகுப்பு நடத்தப்பட்டுள்ளது. இது தவிர தாலுகாக்களில் அவ்வப் போது பேரவைகள் நடத்தப்படுகிறது. வளர்ந்து வருகிற அமைப் பிற்கு இது போதுமானதல்ல. பல்வேறு சிந்தனைகள், குணங்க ளைக் கொண்ட இளைஞர்கள் அமைப்புக்குள் வருகின்றனர். இவர் களை அவ்வப்போது அரசியல்படுத்தத் தவறினால், தக்க வைக்க முடியாது. உறுதிப்படுத்த முடியாது. இளைஞர்களை கட்சிக்குள் கொண்டு வருவதும் தாமதப்படும்.

ஸ்தாபனம்

வாலிபர் அரங்க ஸ்தாபன செயல்பாடுகள் குறித்து விவா திப்பதற்கு மாநில அளவில் இரண்டு நாட்கள் ஸ்தாபன பட்டறை நடத்தப்பட்டது. பட்டறையில் வந்த கருத்துக்களையும் இணைத்து ஸ்தாபன செயல்பாடுகளுக்கான வழிகாட்டுதல்கள் இறுதிப் படுத்தித் தரப்பட்டது. இது நல்ல முயற்சி - ஸ்தாபன செயல்பாட் டிற்கு ஓரளவுஉதவி செய்துள்ளது. பட்டறையின் வழிகாட்டுதல் களை முழுமையாக அமுல்படுத்துவதில் பலவீனம் நீடிக்கிறது.

மாநாடுகள்

இடைப்பட்ட காலத்தில் அனைத்து மாவட்ட மாநாடுகளும் இரண்டு முறை நடத்தப்பட்டது. மாநில மாநாடுகள் கோவையிலும், மதுரை நகரிலும் இரண்டு முறை நடத்தப்பட்டு உள்ளன. இதே போல இடைக்கமிட்டி, கிளைகளின் மாநாடுகள் அமைப்பு விதிக ளின்படி நடத்தப்படுகிறது. ஆண்டுக்கு ஒருமுறை கிளை மாநாடு என்பது 50%தான் அமுலாகிறது. அனைத்து கிளைகளுக்கும் மாநாடு நடத்தப்பட வேண்டும்.

மாநில மையத்திலிருந்து தோழர்கள் டி. ரவீந்திரன், ஏ. பாக்கியம், என்.குணசேகரன் ஆகிய மூவரும் செயல்படுகின்றனர். மாநிலக் குழு அலுவலகத்தில் இரண்டு தோழர்கள் அலுவலக ஊழியர்

களாக இருந்து பணியாற்றுகின்றனர். மாநில மைய செயல்பாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. வளர்ந்து வருகிற வாலிபர் அரங்கத் தேவைக்கு மேலும் ஒருவர் மாநில மையத்திற்கு எடுக்கப்பட்டு நான்கு தோழர்கள் கொண்ட மையமாக்கப்பட வேண்டும்.

மாநில செயற்குழு உறுப்பினர்கள் பக்கத்து மாவட்டங்களுக்கு சென்று உதவுவது அதிகரித்துள்ளது. இன்றைய தேவைக்கேற்ப இது இன்னும் வளர்க்கப்பட வேண்டும். மாநிலக்குழு கூட்டம் ஆண்டுக்கு நான்கு முறை கூடுகிறது. சராசரியாக 80% பேர் கூட்டத்தில் பங்குபெறுகின்றனர்.

மாவட்ட கமிட்டி

மாவட்டக்குழு கூட்டங்கள் நடப்பதில் முன்னேற்றம் உள்ளது. சராசரியாக 50% மாவட்டக்குழு உறுப்பினர்கள் கூட்டங்களில் பங்கேற்கும் தன்மை உள்ளது. சில மாவட்டங்களில் இதைவிட சற்று கூடுதலாகவும், சில மாவட்டங்களில் இதைவிட குறைவாகவும் பங்கேற்பு உள்ளது. தேர்வு செய்யப்பட்டவர்களில் ஒரு பகுதியினர் தொடர்ச்சியாக கூட்டங்களில் பங்கேற்காத நிலை உள்ளது. பரிசீலித்து இதற்கான மாற்று ஏற்பாட்டை செய்கிற பணி அநேகமாக நடைபெறுவதில்லை. அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட மையம் உருவாக்கப்பட்டுள்ளது. பல மாவட்டங்களில் அதன் கூட்டு செயல்பாட்டை வலுப்படுத்த வேண்டியுள்ளது. மாவட்ட மைய ஊழியர் செயல்பாடு முன் முயற்சி, அமைப்பின் செயல்பாட்டை வலுப்படுத்தும்.

மாவட்டக்குழுக்கள் நடைமுறைப்பணிகளுக்கே பெரும்பாலும் திட்டமிடுகின்றன. மாவட்டத்தின் தன்மைக்கேற்ப மாவட்டத்தில் முன்னுக்கு வரும் பிரச்சனைகளின் மீது இயக்கத்திற்கு திட்டமிடுவது என்பது பெரும்பாலும் நடைபெறுவதில்லை. குமரி மாவட்டத்தில் கடலோர பகுதி மக்கள் பிரச்சனைகளுக்காக பல இயக்கங்கள் நடத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இடைக்கமிட்டி

இடைக்கமிட்டிகளின் செயல்பாட்டில்தான் மிகப் பெரிய பலவீனம் உள்ளது. செயல்படுகிற மைய ஊழியர் உள்ள இடைக் கமிட்டிகளில் மேல் கமிட்டி முடிவுகளை அமுல்படுத்துவது, கிளைகளுக்கு சென்று வருவது உள்ளிட்ட பணிகள் நடைபெறுகிறது. இல்லாத இடங்களில் பணிகள் நடைபெறுவதில்லை. இடைக் கமிட்டி மையத்திலிருந்து செயல்படுவதற்கு ஒரு முழு நேர ஊழி

யரை உத்தரவாதப்படுத்த வேண்டும். இடைக்கமிட்டிகளின் செயல் பாட்டை கண்காணித்து வழிகாட்ட வேண்டும்.

முழு நேர ஊழியர்

நீலகிரி மாவட்டத்தில் மாவட்ட மையத்திலிருந்து செயல்பட உடனடியாக ஒரு முழு நேர ஊழியர் தீர்மானிக்கப்பட வேண்டும். மற்ற அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட மையத்தில் வாலிபர் அரங்கப் பணிகளுக்கென முழுநேர ஊழியர்கள் உள்ளனர். கோவை, சென்னை, சேலம் மாவட்டங்களில் மையத்தில் இரண்டு முழு நேரஊழியர்கள் உள்ளனர். பத்தாயிரம் உறுப்பினர்களுக்கு மேல் உள்ள மாவட்டங்களில், இரண்டு முழுநேர ஊழியர்களை நிச் சயிக்க வேண்டும். மாவட்ட மையத்தின் கூட்டு செயல்பாட்டிற்கு (டீம் ஒர்க்) இடைக்கமிட்டிகளுக்கு சென்று வழிகாட்டிட, அமைப்பை விரிவுபடுத்திட இது உதவி செய்யும்.

அதிகமான உறுப்பினர்களை கொண்ட திருப்பூர் போன்ற பல இடைக்கமிட்டிகளில்கூட முழுநேர ஊழியர் இல்லாத நிலை உள் ளது. குறைந்தபட்சம் 5,000 உறுப்பினர்கள் 40க்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டு இடைக்கமிட்டிகளில் ஸ்தாபன பணிக ளைச் செய்திட முழுநேர ஊழியர் அவசியம். தேவையான இடைக் கமிட்டிகளுக்கு முழுநேர ஊழியர்கள் நிச்சயிக்கப்பட வேண்டும்.

அலுவலகம்

பலதரப்பட்ட இளைஞர்கள் வேகமாக அமைப்புக்குள் வரும் சூழ லில், வாலிபர் சங்கத்திற்கு தனி அலுவலகம் தேவை. கோவை, சென்னை, பெரியார் மாவட்டங்களில் தனி அலுவலகம் உள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டக்குழு அலுவலகம் தனியாக அமைத்து செயல்பட வழிகாட்ட வேண்டும். வாய்ப்புள்ள இடைக் கமிட்டிகளும் தனி அலுவலகம் அமைத்து செயல்பட வேண்டும்.

நிதி நிலை

சந்தா ஈவு மூலம் மாநிலக்குழு நிர்வாக செலவுகளை ஈடு செய் கிறது. மாநில மைய நிதியிலிருந்து மூன்றாண்டுகளில் இந்திய மாணவர் சங்கத்திற்கு ரூ. 40, 000 வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட, இடைக்கமிட்டி மையங்களில் நிதி நெருக்கடி உள்ளது. மாவட்டக்குழு கூட்டங்கள் நடத்துவது, தபால், சுற்றறிக்கை, போக்கு வரத்து, மாநிலக்குழு கூட்டங்களுக்கு வந்து போவது என மாவட்ட மையத்தில் நடைபெறும் நிர்வாக செலவுகளுக்கே சிரமப்படும் நிலையுள்ளது. மாநில மையம் போல சந்தா ஈவை வைத்து மாவட்ட

ஸ்தாபன பணிகளைச் செய்திட முடியாது மாவட்ட மைய நிதி வசூல் செய்யவேண்டும். கோவை மாவட்டத்தில் குறிப்பிட்ட காலத்தை தீர்மானித்து ரூ. 1,50,000 வரை மாவட்ட மையத்திற்காக வசூலிக்கப்பட்டது. அனைத்து மாவட்டங்களிலும் இத்தகு முயற்சி களை மேற்கொள்ள வேண்டும்.

இளைஞர் முழக்கம்

மாதம் 10,000 பிரதிகள் அச்சிடப்படுகிறது. கடனுக்கு பத்திரிகை தரப்படுவதில்லை. முன் பணம் அனுப்புபவர்களுக்கு மட்டுமே பத்திரிகை அனுப்பப்படுகிறது. இதனால், கடன் என்பது இல்லை. மூன்றாண்டு சந்தா ரூ. 100 என்கிற வகையில் ரூ. 2,20,000 வசூல் செய்து இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. 308 இடைக்கமிட்டிகளில் சராசரியாக மாதம் 150 கமிட்டிகளே பத்திரிகை வாங்குகின்றன. அனைத்து இடைக் கமிட்டிகளையும் பத்திரிகை வாங்க வைப்பதற் கும், விற்பனையை அதிகப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட வேண்டும்.

எதிர்கால கடமைகள்

- 10 லட்சம் உறுப்பினர்கள் சேர்ப்பது
- மாநிலக்குழுவிற்கு சொந்த கட்டிடம் வாங்குவது
- மாவட்டக்குழுக்களுக்கு தனி அலுவலகம் ஏற்பாடு செய்வது
- மாவட்ட மையத்தை பலப்படுத்துவது
- இடைக்கமிட்டிகளின் செயல்பாட்டில் முன்னேற்றம் காண்பது
- தாழ்த்தப்பட்ட, சிறுபான்மை பகுதி வாலிபர்களைத் திரட்ட கூடுதல் கவனம் செலுத்தவது
- பெண்களைத் திரட்ட விசேஷ கவனம் செலுத்துவது
- மாணவர் அரங்கத்திற்கு உதவுவது

மாணவர் அரங்கம்

கடந்த கட்சி மாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட கடமைகள்

1. இரண்டு லட்சம் உறுப்பினர்களை சேர்ப்பது
2. எல்லா மாவட்டங்களிலும் முழு நேர ஊழியரை ஏற்பாடு செய்வது.
3. மாவட்ட மையங்களை பலப்படுத்துவது; இடைக்கமிட்டிகள் செயல்பாட்டில் முன்னேற்றம் காண்பது.
4. கேந்திரமான கல்வி மையங்களில் மாணவர்களை திரட்ட முன்னுரிமைகொடுப்பது.
5. மதுரை கல்விப் பட்டறையில் உருவாக்கிய கோரிக்கைகள் மீது இயக்கங்களுக்கு திட்டமிடுவது.
6. மாணவர் அமைப்பிற்கும், ஆசிரியர் அமைப்புகளுக்கும் ஒருங்கிணைப்பை உருவாக்குவது.
7. மாணவர்களை திரட்ட விசேஷ முயற்சி எடுப்பது.
8. தாழ்த்தப்பட்ட, ஆதிவாசி மாணவர்களை திரட்ட கூடுதல் கவனம் செலுத்துவது.
9. கல்வி நிலைய அளவில் கட்சிக் கிளைகளை உருவாக்குவது.

நடைபெற்ற முக்கிய இயக்கங்கள்

மாநில அளவிலான கல்வி பிரச்சனைகள் மீதும் ஸ்தல கோரிக்கைகளுக்காகவும் பல்வேறு இயக்கங்கள் நடந்துள்ளன.

ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை !மீண்டும் உடையாரிடம் ஒப்படைக்கக் கூடாதென்று மாநில அளவில் மூன்று வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. கோரிக்கை வெற்றி பெறவில்லை என்றாலும், ராமச்சந்திரா கல்லூரி அரசு கல்லூரியாக இருந்த பொழுது சேர்ந்த மாணவர்கள் வேறு அரசு கல்லூரிகளுக்கு மாற்ற அரசு இசைந்தது. கல்வியைத் தனியார் மயமாக்குவதற்கு எதிரான போராட்டத்தின் அவசியத்தை மாணவர்கள் மத்தியிலும், பொது மக்கள் மத்தியிலும் எடுத்துச் செல்ல முடிந்தது.

1993ம் ஆண்டு பட்ஜெட்டில் கணிசமான நடுநிலைப் பள்ளிகளை அருகில் உள்ளஉயர்நிலைப் பள்ளிகளுடன் இணைப்பதென

அரசு அறிவித்தது. இதை எதிர்த்து சென்னையில் தடையை மீறி மாணவர் சங்கம் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு முயற்சித்த போது கைதானார்கள். அரசின் முடிவிற்கு பலதரப்பில் இருந்தும் எதிர்ப்பு வந்த பிறகு அரசு தனது முடிவை மாற்றியது.

★ கல்விக்கட்டண உயர்வு, புரவலர் திட்டம், கல்லூரி மாணவர் பேரவைத் தேர்தல் ரத்து ஆகிய கோரிக்கைகள் மீது 14.7.93 அன்று மாநிலம் தழுவிய வேலைநிறுத்தத்திற்கு மாணவர் சங்கம் அறைகூவல் விடுத்தது. சுமார் 4 லட்சம் மாணவர்கள் வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்டனர். இதையொட்டி கல்லூரிப் பேரவைத் தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டது.

★ 1994ம் ஆண்டு பட்ஜெட்டின் போது 50 மாணவர்களுக்கும் குறைவாக உள்ளஆரம்பப் பள்ளிகளை மூடுவதென அரசு அறிவித்தது. இதை எதிர்த்து மதுரையில் சாலை மறியலுக்கு திட்டமிட்டோம். பொதுவாகவே அரசின் முடிவிற்கு எதிர்ப்புக்குரல் வந்தது. அரசு தனது முடிவைக் கைவிட்டது.

★ 69 சதமானம் இட ஒதுக்கீடு அமுலாக்க வேண்டும்; மேலும் உயர்கல்வி பயில விரும்பும் அனைத்து மாணவர்களுக்கும் இடம் கிடைக்கும் அளவிற்கு கூடுதல் கல்லூரிகள் திறக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி 29. 6. 94 அன்று மாநில அளவிலான ஒரு நாள் வேலைநிறுத்தத்திற்கு மாணவர் சங்கம் அறைகூவல் விடுத்தது. வேலை நிறுத்தத்தில் பெரும்பகுதி மாணவர்கள் பங்கேற்றனர்.

★ 1994ல் ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியில் இலவச இடத்திற்கு தேர்வான சசிகலா, கிருஷ்ணகுமாரி என்ற மாணவிகளிடம் அதிகப்பணம் கேட்டு கல்லூரி நிர்வாகம் விரட்டிவிட்டது. இப்பிரச்சனையை மாணவர் சங்கம் கையில் எடுத்தது. பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இடம் அளிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில் மாணவர் சங்கத்தின் அறைகூவலுக்கிணங்க மாநிலம் தழுவிய பல வேலை நிறுத்தங்கள் வெற்றிகரமாக நடந்துள்ளன. ஒரு சில கோரிக்கைகளையும் வென்றெடுக்க முடிந்தது. இருப்பினும் மாணவர்களிடம் ஏற்பட்டுள்ள செல்வாக்கை ஸ்தாபனமாக்க இயலாத நிலை நீடிக்கிறது.

மாணவர்களின் கோரிக்கைகளுக்காக பல இயக்கங்கள் நடந்திருந்தாலும் மத்திய - மாநில அரசுகளின் பொருளாதார மற்றும் மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிரான போராட்டத்தில்

மாணவர்களை ஈடுபடுத்த முடியவில்லை. இதில் எதிர்காலத்தில் கூடுதல் முயற்சி தேவைப்படுகிறது.

மாநிலக்குழு, மாநில செயற்குழு, மாநில மையம்

மாநில மையத்தில் இருந்து ராமகிருஷ்ணன், கோவிந்தராஜன், கண்ணன் ஆகியமூன்று தோழர்கள் செயல்பட்டு வருகிறார்கள். கல்வி பிரச்சனைகள் வருகின்ற போது தலையிட்டு இயக்கங் களுக்கு திட்டமிடுவதில் மாநில மையத்தின், மாநில செயற்குழு வின் முயற்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால், மாவட்டங்களில் ஸ்தாபன செயல்பாட்டில் ஏற்படும் பிரச் சனைகளில் தலையிடுவதிலும், செயல்பாட்டை சீரமைப்பதிலும் முன்னேற்றம் தேவைப்படுகிறது.

மாநில செயற்குழு, 'மாநிலக்குழு - குறிப்பிட்ட கால அவ காசத்தில் முறையாக கூட்டப்படுகிறது.

மாவட்ட மையங்கள் / முழு நேர ஊழியர்கள்

பெரியார், வட ஆற்காடு அம்பேத்கர் ஆகிய இரண்டு மாவட்டங் களைத் தவிர மற்ற மாவட்டங்களில் மாவட்ட அளவிலான அமைப் புகள் உள்ளன. மாவட்ட அளவில் ஒரு டீம் உருவாக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் மாணவர் சங்க செயல்பாட்டில் முன்னேற்றம் உள்ளது. கடந்த மாநில கட்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவான மாவட்டத்திற்கு ஒரு முழு நேர ஊழியர் என்ற முடிவு இன்னும் பல மாவட்டங்களில் அமுலாகவில்லை.

சென்னை, கோவை, மதுரை, திருச்சி, நெல்லை, சேலம், சிதம் பரம், தஞ்சை போன்ற நகரங்கள் மாநிலத்தில் பெருமளவிலான மாணவர்களைக் கொண்ட முக்கிய கல்வி மையங்களாக திகழ் கின்றன. சிதம்பரம், நெல்லை, சேலம், தஞ்சையைத் தவிர சென்னை, மதுரை, கோவை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் முழு நேர ஊழியர்கள் இல்லை. இதனால், மாணவர் சங்க ஸ்தாபன செயல்பாட்டில் தொய்வு நீடிக்கிறது. வாய்ப்பிருந்தும் எதிர்பார்த்த முன்னேற்றம் இல்லை. இந்த நான்கு மாவட்டங்களில் குறிப்பாக மாவட்டத் தலைநகர்களில் மாணவர் சங்கம் பலப்படாமல் தமிழகத் தில் மாணவர் இயக்கம் பலமடைய முடியாது.

மாணவர் சங்க இடைக்கமிட்டிகள், கல்வி நிலையக் கிளைகள் பெரும்பகுதி மாவட்டங்களில் பெயரளவிற்கே உள்ளன.

மாவட்டத்திற்கு ஒரு முழு நேர ஊழியர், மாவட்ட மையத்தில் ஒரு டீம் செயல்பாடு, இடைக்கமிட்டி மற்றும் கல்வி நிலைய அளவில்

ஊழியர்களை உருவாக்குவதில் முன்னேற்றம் கண்டால்தான் மாணவர் சங்கத்திற்கு ஏற்படும் செல்வாக்கை ஸ்தாபனப்படுத்தவும் உறுதிப்படுத்தவும் முடியும்.

உறுப்பினர் சேர்ப்பு

1991	*79,000*
1992	*1,00,440*
1993	*55,256*
1994	*65,227*

உறுப்பினர் சேர்ப்பில் கடந்த மூன்று ஆண்டுகளில் முன்னேற்றம் இல்லை. குறிப்பாக 93ம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பில் பெருத்த பின்னடைவு ஏற்பட்டது.

மாவட்ட அளவில் ஸ்தாபன செயல்பாட்டில் உள்ள தொய்வினால் உறுப்பினர் சேர்ப்பில் தேக்கம் நீடிக்கிறது. மாணவர் சங்க அறைகூவலை ஏற்று வேலை நிறுத்தத்தில் பங்கேற்கும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆனால், அப்படி பங்கேற்கும் மாணவர்களை உறுப்பினர்களாக்கக்கூடிய ஸ்தாபன ஏற்பாடு பல மாவட்டங்களில் இல்லாததே உறுப்பினர் சேர்ப்பில் உள்ள தேக்கத்திற்கு முக்கியமான காரணம். கேந்திரமாக கல்வி மையங்களான சென்னை, மதுரை, கோவை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் நீடிக்கும் தேக்கமும் ஒட்டுமொத்த தேக்கத்திற்கு காரணமாக உள்ளது.

இன்றுள்ள அரசியல், பொருளாதார சூழலில் மாணவர்களிடையே எதிர்காலத்தைப் பற்றிய அச்சம் ஏற்பட்டுள்ளது. உயர் கல்விக்கு இடம் பிடிக்க, வேலைவாய்ப்பைப் பெற நடக்கும் கடுமையான போட்டிக்கு தங்களைத் தயார் செய்துகொள்ள ஒரு பகுதி மாணவர்கள் பிரத்தியேகமான முயற்சியில் இறங்குகின்றனர். அப்படிப்பட்ட மாணவர்கள், மாணவர் சங்கத்தில் சேருவதே தங்களின் படிப்பை பாதிக்கும் என்று கருதுகிறார்கள். மாணவர் சங்கம் வைத்துள்ள 'படி, போராடு' என்ற அடிப்படையான கோஷத்தை விளக்கி மாணவர் இயக்கத்தின் வளர்ச்சியோடு மாணவர்களின் எதிர்காலமும் இணைந்துள்ளது என்பதையும் மாணவர்கள் மத்தியில் எடுத்துச் சென்று அவர்களைத் திரட்ட வேண்டும்.

மேலும் கல்வி நிலைய வளாகங்களில் புதிதாக பெருகி வரும் ஜனநாயகமற்ற தன்மையும், குழப்பமும், பெருமளவில் மாணவர்கள் நம்மிடம் வருவதற்கு தடையாக இருக்கின்றன. மாநிலத்தில் தனி

யார் கல்வி நிலையங்களே அதிகம். தனியார் கல்வி நிலையங்களில் பேரவைக்கு தேர்தல் மறுக்கப்படுகிறது. மாணவர் இயக்கத்தையும் நிர்வாகம் தடுக்கிறது. இப்படிப்பட்ட பாதகமான சூழ் நிலையை முறியடிக்க மாணவர் - ஆசிரியர் அமைப்புகள் இணைந்து முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மாணவர் சங்க உறுப்பினர்களில் கணிசமான மாணவிகளும் உள்ளனர். தஞ்சையில் மாநில அளவிலான மாணவிகள் மாநாடு நடந்துள்ளது. பரவலாக மாவட்டங்களில் மாணவர் சங்க செயல் பாட்டில் மாணவிகளின் பாத்திரம் அதிகரித்து வருகிறது. மேலும், கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

எதிர்கால கடமைகள்

- ☐ உறுப்பினர் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவது
- ☐ எல்லா மாவட்டங்களிலும் குறைந்தபட்சம் ஒரு முழு நேர ஊழியரையாவது ஏற்பாடு செய்வது.
- ☐ மாவட்ட மையங்களில் செயல்பாட்டை உறுதிப்படுத்துவது பகுதிக்குழுக்களை அமைத்து செயல்படச் செய்வது.
- ☐ கேந்திரமான கல்வி மையங்களில் விசேஷ கவனம் செலுத்துவது.
- ☐ மாணவர் - ஆசிரியர் அமைப்புகள் இணைந்து, தமிழக கல்வி மேம்பாட்டிற்காக இயக்கம் நடத்துவது.
- ☐ தாழ்த்தப்பட்ட, ஆதிவாசி மாணவர்களை திரட்ட தீவிர கவனம் செலுத்துவது.

மாதர் அரங்கம்

கட்சியின் 14வது மாநில மாநாட்டில் குணாம்ச ரீதியாகவும், எண்ணிக்கையிலும் கட்சி பெண்களின் அரசியல் பங்கு விசேஷமாக பாராட்டப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளிலும் இந்த சிறப்பான (POSITIVE) நிகழ்வுப் போக்கு நீடித்துள்ளது என்று கூற முடியும். குறிப்பாக,

1. சுயமாக செயல்படும் பெண்கள் அமைப்பு என்று ஜனநாயக மாதர் சங்கத்திற்கு கிடைத்துள்ள பெயர். (ஒரு சில மாவட்டங்களில் இந்த நிலை இல்லை)
2. முன்பை விட பல்முனை நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.
3. மாவட்ட அளவிலான செயல்பாட்டில் அபிவிருத்தி - இவை இந்த போக்கிற்கு சான்றாகும்.
4. எல்லாவற்றிற்கும் மேலாக, பெண்கள் மீதான அத்துமீறிய கொடுமைகளில் உறுதியாக தலையிடும் அமைப்பு என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளோம்.

1. பிரச்சனைகளில் தலையீடு

அ) பெண்கள் மீதான கொடுமைகள் - குறிப்பாக, போலீஸ் அராஜகத்தை தொடர்ந்து கையில் எடுத்துள்ளோம். நம்முடைய விடாமுயற்சி அரசை ஓரளவிற்காவது நடவடிக்கை எடுக்க நிர்ப்பந்தித்துள்ளது. தென்னாற்காடு வள்ளலார், கோவை, காமராசர், ராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் சகோதர அமைப்புகள் ஆதரவு அளித்ததுடன் தொடர்ந்து நடவடிக்கை எடுத்தார்கள் என்பது வரவேற்க வேண்டிய அம்சம். பத்திரிகைகளில் தொலைக் காட்சிகளில் நம்முடைய இந்த நடவடிக்கைகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மற்றும் மக்கள் மத்தியில் மாதர் சங்கத்திற்கு முன்பைவிட அதிகமான அறிமுகம் கிடைத்துள்ளது.

ஆ) பெண்களின் சமுதாய அந்தஸ்து குறித்த இயக்கங்களில் நாம் ஓரளவிற்கு மட்டுமே கவனம் செலுத்தியுள்ளோம்.

சென்னையில் சட்ட உதவி மையத்தின் செயல்பாட்டில் பலவீனங்கள் இருந்தாலும் மக்களிடையே வரவேற்பு பெற்றுள்ளது. மற்ற மாவட்டங்களிலும் ஆரம்பிக்க வேண்டிய ஒன்றாகும். சட்ட உதவி வலுப்படுத்த வேண்டிய அதே நேரத்தில் இப்பிரச்சனைகளை சம் பந்தப்பட்ட பகுதி மக்களிடம் எடுத்

துச் சென்று இயக்கமாக்கி - விழிப்புணர்வு கொள்ளச் செய் வதில் நமது கவனம் போதுமானதல்ல.

கே. பி. ஜானகியம்மாள் டிரஸ்ட் மூலம் பெண் சிசுவதை அதிக மாக இருக்கும் பகுதிகளில் 9 மாணவிகளுக்கு கல்வி உதவி செய்யப்பட்டு வருகிறது.

இது போன்ற அமைப்புக்களை நடத்த பல மாவட்டங்களில் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். இவைகள் மூலம் பல பகுதிகளில் நமது இயக்கம் வேரூன்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அறிவியல் இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் நாமும் பங்கு கொண்டு மூடப் பழக்கவழக்கத்திற்கு எதிரான கருத்துக்கள், பெண்ணடிமைத்தனத்திற்கு எதிரான கருத்துக்களை சில மாவட்டங்களில் மக்களிடம் கொண்டு சென்றிருக்கிறோம்.

உ. புதிய பொருளாதார கொள்கைக்கு எதிரான ஏராளமான இயக்கங்கள் சுயேச்சையாகவும், கூட்டாகவும் நடத்தியுள்ளோம். பெண்களின் பங்கு சில நேரங்களில் அதிகம். சில நேரங்களில் குறைவாக உள்ளது. புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் உலக ளாவிய ஆதிக்கம் ஆகியவற்றிற்கும் பெண்களின் வாழ்வுப் பிரச்ச னைக்கும் உள்ள இணைப்பை புரிந்துகொள்ளச் செய்யும் சிக்க லான பணியை நாம் திட்டமிட்டு பெருமுயற்சியுடன் மேற்கொள்ள வேண்டியுள்ளது. விலை உயர்வுக்கு எதிரான அதிருப்தி / ஆதங்கம் அதிகமாகி வருகிறது. ரேஷன் அட்டை, ரேஷன் மூலம் கூடுதல் பொருட்கள் வழங்குதல் போன்ற உடனடி நிவாரண கோரிக்கை களை இணைத்து நடத்தப்படும் இயக்கங்களில் பெண்கள் அணி திரளுகிறார்கள்.

பல புதிய வடிவங்களை நாம் பயன்படுத்தியதும் இந்த முக்கிய மான பிரச்சனை பற்றிய பிரச்சாரத்தை விரிவுபடுத்தி எடுத்துச் செல்ல உதவியுள்ளது.

அ) கிராமப்புற உழைக்கும் பெண்கள் குறித்த வி. தொ. ச. உடன் சேர்ந்து சிறப்பு பேரவை கூட்டங்கள் நடத்தி கோரிக்கைகள் வகுத் தது இந்த கால கட்டத்தின் ஒரு சிறப்பம்சம் ஆகும். 7 மாவட்டங்க ளில் மாநாடுகள்; வி. தொ. ச. வுடன் மறியல் நடத்தினோம். கோரிக் கைகளை பல மாவட்டங்களிலும், பல மட்டங்களிலும் கொண்டு சென்று அமுலாக்க வைப்பது நம்முடைய எதிர்கால கடமையாகும்.

இதில் தொடர்ச்சியின்மை அப்பெண்கள் மத்தியில் சோர்வு ஏற்படுத்தக்கூடும்.

ஆ) பகுதிவாரி பெண்கள் பிரச்சனைகளில் திரட்டப்படாத பெண்களின் பிரச்சனைகளை அணுகியுள்ளோம். காட் ஒப்பந்தத்தின் விளைவுகள் பெண்களை வேலை வாய்ப்பிலிருந்து தள்ளக் கூடும் என்ற பின்னணியில் இந்த முயற்சி மிகவும் முக்கியமானது.

3. கலாச்சாரம் மக்கள் தொடர்பு சாதனங்கள்

அ) இந்த காலகட்டத்தில் டி. வி. யின் தாக்கம் கிராமம் வரை சென்றுள்ளதும், மேற்கத்திய நாடுகளின் ஒளிபரப்புக்களின் வீச்சு அதிகமாகி வருவதும், கவலையளிக்கக்கூடிய, மனோரீதியாக பாதிப்புகளை உருவாக்கி வருகின்றன. பெண்களை வியாபாரப் பொருளாக்கும் நுகர்வோர் கலாச்சாரம் வேரூன்றிக் கொண்டிருக் கிறது. அரசாங்க ஒளிபரப்பு வெளிநாட்டுடன் போட்டியில் தணிக்கை விதிகளை மீறும் கட்டாயத்தில் உள்ளார்கள்.

ஆ) மற்றொரு பக்கம், திரைப்படங்களின் மூலம் பெண்களைப் பற்றிய பழமைவாத கருத்துக்கள் பலமாக பிரச்சாரம் செய்யப்படுகின்றன. நம் சங்கம் ஒரு சிறிய அளவிற்கு மட்டுமே இந்த ஏற்றத் தாழ்வான மோதலை நடத்தி வருகிறது. சென்னையில் மீடியா குழு அமைத்து செயல்பட வைத்துள்ளோம். நுகர்வோர் கண்காணிப்புக்குழு அமைத்து மாவட்டங்களில் ரேஷன் கடைகளில் நமது பெண் தோழர்கள் 10 பேர் சென்று கண்காணிக்கின்றனர்.

பெண்கள் கலைக்குழுக்கள் மூலம் முற்போக்கு சிந்தனைகள், கலை வடிவங்கள், நாடகங்கள் சில மாவட்டங்கள் இயற்றுதல். இவைகளில் ஒரு சில குழுக்களையாவது நிரந்தரமாக செயல்படும் கலைக்குழுக்களாக்குவது.

வானொலி, டி. வி. யில் மாற்று நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யும் முயற்சி ஆரம்பித்தல்.

4. பொங்கல் விழா: 1993, 1994ல் 'பொங்கல்' மதச்சார்பற்ற விழாவாக முஸ்லிம்மக்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரிரு இடங்களில் நடத்தப்பட்டது. 1993ல் சென்னையில் நவயுக நவராத்திரி, பெண்கள் பிரச்சனைகளை மையமாக வைத்து அனுஷ்டிக்கப் பட்டது. இதுபோன்ற பாரம்பரிய நிகழ்ச்சிகளின் வடிவங்களை சுவீ

கரித்து, உள்ளடக்கத்தை மாற்றி நடத்துவது வரவேற்பைப் பெறு கிறது.

மதச்சார்பின்மையும் பெண்களும்' என்ற சிறு பிரசுரம் 5000 இக்கால கட்டத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

5. அரசியல் பங்கேற்பு

அ) பெண்களுக்கு அரசியல் தெளிவு அவசியம் என்ற கருத்து இன்று நம் ஊழியர்கள் வரைதான் கொண்டு சென்றிருக்கி றோம். பொது அங்கீகாரம் இன்னும் ஏற்படுத்த முடியவில்லை. அரசியல் பிரச்சாரங்களில் பெண்களின் பங்கு சிறப்பாக அமைந்து வருகிறது. இடைத்தேர்தல்களில் இதன் வீச்சு குறிப் பிடத்தக்கது.

ஆ) புதிய பஞ்சாயத்து சட்டம் வந்த பிறகு, இதில் பெண்களுக்கு ஒதுக்கீடு உண்டு என்ற அம்சத்துடன் 'முச்சந்தி' பஞ்சாயத் துக்கள் என்று 7 மாவட்டங்களில் நடத்தினோம். சென்னையில் நடுத்தெரு சட்டமன்றம் நடத்தினோம். அதிகாரங்கள், நிதி ஏற் போடுகள் குறித்த பிரச்சனை இருப்பினும், பெண்களின் சமு தாய பங்கெடுப்பு - வரும் உள்ளாட்சி தேர்தல்களில் பல மடங்கு உயர்த்தும். இதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

- 5 மாவட்டங்களில் நடந்த பஞ்சாயத்து சட்டம் குறித்து பயிற்சி முகாம் நல்ல அனுபவங்களை அளித்துள்ளது.
- பகுதிவாரி ஸ்தல கோரிக்கைகளை தொகுத்து பட்டியல் உரு வாக்கி ஒரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டும்.

6. கூட்டு இயக்கங்கள்

சென்னையில் மற்ற மாதர் அமைப்புக்களுடன் கூட்டு மேடை உருவாக்கியதில், நமக்கு முன்னணி பாத்திரம் உண்டு. பாண்டி, திருச்சி போன்ற மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் இதற்கான முயற்சிகள் போதுமானதாக இல்லை. சில நேரங்களில் சில பிரச்சனைகள் - கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டாலும் மாதர் இயக்கஒற்றுமை, நாம் கொண்டு செல்லும் கோரிக்கைகளுக்கு வலு சேர்க்கின்றன என்பதில் சந்தேகமில்லை.

7. மகளிர் சிந்தனை

விடாப்பிடியாக நடந்து வரும் கருத்துப் போராட்டத்தில் இது சிறந்த ஆயுதமாக அமைகிறது. மாதாமாதம் தவறாது கொண்டு வரு கிறோம். சராசரி 10, 500 பிரதிகள் அச்சிடப்படுகின்றன. ஓரளவு

தற்போது நஷ்டமில்லாமல் நடத்தப்படுகிறது. உள்ளடக்கம் இன்னும் சிறப்பாக கொண்டு செல்வதற்கு, மாவட்டங்களின் உதவி தேவை. ஆசிரியர் குழு கூடி திட்டமிடுவதில் பலகீனம் இருக்கிறது. விற்பனையை அதிகரிக்க வேண்டும். திண்டுக்கல், புதுக்கோட்டையில் வாசகர் வட்டங்கள் உள்ளன. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், இன்றுள்ள அரசியல், பொருளாதார, சமூக சூழ்நிலை நம் இயக்கத்தை வளர்ப்பதற்கு தடையாக உள்ளன. அதை மீறி செயல்படுகிறோம். பெண்கள் பற்றிய பல தவறான கருத்துக்களில் - சமூக பின்னணி மறைக்கக்கூடிய விஷமத்தனமான பிரச்சாரம் - பெண்ணே பெண்ணுக்கு எதிர் என்ற வாதத்தை எதிர்க்க வேண்டியுள்ளது.

சாராய எதிர்ப்பு, எஸ். ஈ. டபிள்யு. ஏ. போன்ற கூட்டுறவு செயல்பாடுகள் போன்றசில புதிய திசை வழிகளில் செல்வதற்கு சரியான நிலைபாடு மற்றும் வழிகாட்டுதல் உருவாக்க வேண்டியுள்ளது அவசர அவசியமாகும்.

8. ஸ்தாபனம்

1. **உறுப்பினர் பதிவு** தமிழகத்தில் நாம் நம்முடைய செல்வாக்கிற்கு ஏற்ப உறுப்பினர் பதிவை அதிகரிக்க முடியவில்லை என்ற அகில இந்திய மாதர் மாநாட்டில் விமர்சனம் சரியானதே. இதற்கான காரணத்தை பரிசீலித்து சரிசெய்ய வேண்டும்.

2. அ) மையத்தின் செயல்பாடு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. ஏறத்தாழ 3 வாரத்திற்கு ஒருமுறை மையம் கூடுகிறது. மாவட்டங்களுக்கு வழிகாட்டுதலில் முன்னேற்றம் உண்டு. மைதிலி உடல் நிலை காரணமாக விடுப்பில் இருப்பதால், பாப்பா, வாசுகி, விஜயா, சுதா, மாதம்மா, சாவித்திரி ஆகியோர் மையத்தில் உள்ளார்கள். செயல்பாட்டில் ஏற்றதாழ்வுகள் உண்டு. பொதுவாக, மைய ஊழியர்கள் மைய வேலைகளுக்கு கூடுதல் கவனமும், நேரமும் ஒதுக்க வேண்டும். ஓரிருவரை மையத்தில் இணைத்து அவர்கள் சென்னையிலிருந்து செயல்பட்டால் உதவிகரமாக இருக்கும்.

   ஆ) **மாநில செயற்குழு** - மாநிலக்குழுவை ஒட்டி மட்டுமே கூட்டப்படுகிறது. இடையில் கூட்டுவதில் சிரமம் உள்ளது. சில நிர்வாகிகள் கூடுதல் பொறுப்புகள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

   இ) **மாநிலக்குழு** - சராசரியாக 3 மாதத்திற்கு ஒருமுறை கூடுகிறது. 75% உறுப்பினர்கள் கலந்துகொள்கிறார்கள். அறிக்கைகள் பரிசீலனையுடன் வைக்கப்பட்டாலும், முன் தயாரிப்

புகள் போதாது. மாநிலக்குழு உறுப்பினர்கள் தரத்தில் முன்னேற்றம் இருக்கிறது.

ஈ) **மாவட்டக்குழுக்கள்** - ஒரிரு மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டக்குழுக்கள் தானாகவே கூடி முடிவுகள் எடுக்கின்றன. மத்திய - மாநில அறைகூவல்களை பெரும்பாலும் அமுலாக்குகின்றன. சுயேச்சையான செயல்பாட்டில் குறிப்பிடும் அளவிற்கு முன்னேற்றம் எழுந்துள்ளது, ஆரோக்கியமான அம்சமாகும்.

3. **ஊழியர்கள்** - இந்த காலகட்டத்தில் தலைமைப் பாத்திரம் வகிக்கும் ஊழியர்களின் திறமையில் முன்னேற்றம் இருக்கிறது. மாவட்டங்களில் ஊழியர்களை பட்டியலிட்டு மாதம் ஒரு முறை பேரவை நடத்துவது என்ற முடிவு அமுலாக்கப்படவில்லை. ஊழியர்களை பயிற்றுவிப்பதற்கான முயற்சிகள் - மாநில அளவில் இரு தினங்கள் ஸ்தாபன பட்டறையும், 4, 5 பகுதிகளாய் மாதர் சங்கத்தைப் பற்றி 5 பாடத் திட்டத்தின் வகுப்புகளும் நடத்தப்பட்டன. ஊழியர் எண்ணிக்கையை நாம் அதிகப்படுத்தினால்தான் அடுத்த கட்ட வளர்ச்சியை நாம் எட்ட முடியும்

4. **பெண்களை திரட்டுதல்**- உறுப்பினர் பதிவுக்கும், திரளும் எண்ணிக்கைக்கும் இடையில் அதிகமான இடைவெளி இருக்கிறது. சில வகை போராட்டங்களில் பெண்கள் கலந்துகொள்வதில் சிரமம் இருக்கிறது என்பது ஒரு காரணம். சில போராட்டங்களில் கூடுதலாக கலந்துகொள்கின்றனர் என்ற நிலையும், நடுத்தர பெண்கள் தெருவில் இறங்கி கோஷமிடுவதற்கும் தயங்குகிறார்கள். இவர்களின் தயக்கத்தை உடைப்பது ஒரு புறம், மறுபுறம் பலதரப்பட்ட பெண்கள் கலந்துகொள்ளும் வகையில் நிகழ்ச்சிகளை திட்டமிட வேண்டியுள்ளது. கருத்தரங்கம், கோரிக்கை மாநாடுகள், குறுகிய நேர தர்ணாக்கள் போன்றவற்றில் பெண்களை அதிகமாக கொண்டுவர முடியுமா என்று பார்க்க வேண்டும். கிளை மட்டத்தில் வெறும் கோரிக்கைகளுக்கான ஆர்ப்பாட்டங்களுடன் நின்றுவிடாமல், தொடர்ச்சியாக கிளை செயல்பாடு, கல்வி, ஆரோக்கியம், சுகாதாரம், ஸ்தல பிரச்சனைகள் போன்ற விஷயங்களைச் சுற்றி ஆரம்பிக்கலாம்.

5. பெண்களின் சில விசேஷ பிரச்சனைகள்

பெண்-இன்றைய சமுதாயத்தில் இரட்டிப்பு சுரண்டலுக்கு ஆளா வதுடன் சில விசேஷ கட்டுப்பாடுகளுக்கும், நிர்ப்பந்தங் களுக்கும் இரையாகிறாள்.

அ) அதிகமாக வேலைப்பளு, அதனால் நேரமின்மை மற்றும் உடல் பாதிப்புகள்.

ஆ) மற்றொருவரை சார்ந்து இருக்க வேண்டிய கட்டாயம் (பொருளாதார மற்றும் சமுதாய ரீதியாக)

இ) சுயேச்சையாக பல இடங்களுக்கு செல்வதில் பலகீனம்.

ஈ) குடும்ப பொறுப்புகள் - வீட்டு வேலைகள்.

தோழர்களின் உதவியின்றி பெண்கள் இயக்க வேலைகளுக்கு வருவது மேற்சொன்ன காரணங்களால் மிகவும் கடினமாகிறது.

நிதி நிலைமை

பல மாவட்டங்களில் வசூல் செய்வதில் பலகீனம் இருப்பதால், இயக்க வேலைகள் பாதிக்கப்படுகின்றன. இதில் கட்சியின் திட்ட மிட்ட கவனம் தேவை.

ஊழியர்களை அதிகப்படுத்தி, அவர்களுக்கு ஊதியம் அளிப்ப தில் ஓரளவு முன்னேற்றம் இருக்கிறது. இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தினால், மாதர் இயக்கம் வளர்ச்சியடையும்.

அனைத்திந்திய 4வது மாநாடு 1994 ஆகஸ்ட் 11-14 தேதிகளில் கோவையில் நடத்தியது தமிழக மாதர் சங்க வரலாற்றில் முக்கிய மான நிகழ்ச்சியாகும். 17 மாநிலங்களிலிருந்து வந்த 800 பிரதி நிதிகள் ஏகோபித்து பாராட்டிய நிலையில் மாநாடு அனைத்துத் துறையிலும் சிறப்பாக இருந்தது. கோவை மாவட்ட கட்சி கமிட்டி யின் பணி பெரிதும் பாராட்டத்தக்கது. ஜனநாயக மாதர் சங்கத்தின் தமிழ் மாநிலக்குழுவும் திட்டமிட்டு செயல்பட்டுள்ளது. 25 ஆயிரம் பெண்களின் பேரணி கோவையை பிரமிக்க வைத்தது. பிரம் மாண்டமான பொதுக்கூட்டத்தில் தோழர் ஜோதிபாசுவும், தலைவர் களும் பேசியது நிகழ்ச்சிக்கு மகுடமிட்டதாக இருந்தது. மாவட்டங் களிலிருந்து மாநாட்டிற்கு வந்து திரும்பிய பெண்கள் மிக உற்சாக மடைந்து சென்றுள்ளனர். தமிழகத்தில் சங்கத்தை வலுப்படுத்த இத னைப் பயன்படுத்த வேண்டும்.

எதிர்கால கடமைகள்:

1. 4 லட்சம் உறுப்பினர்களைச் சேர்ப்பது.

2. தமிழகத்தில் பெண்களை பாதிக்கும் பல்வேறு பிரச்சனைகள் மீது தொடர்ந்து புதிய வடிவங்களில் இயக்கங்களை நடத்துவது; ஸ்தல பிரச்சனைகளை தொடர்ச்சியாக எடுப்பது; கலை வடிவங்களுக்கு (கலைக்குழு அமைப்பது) முக்கியத்துவம் அளிப்பது.

3. கிராமப்புற பெண்களின் கூலி உயர்வு உட்பட பிரத்யேக பிரச்சனைகளை எடுத்து பல்வேறு இயக்கங்களை நடத்துவது; அவர்கள் மத்தியில் பிரச்சாரத்தைக் கொண்டு செல்வது.

4. தாழ்த்தப்பட்டோர், சிறுபான்மையினர், மலைவாழ் மக்கள் ஆகியோர் மத்தியில் இயக்கம் காண விசேஷ முயற்சி எடுப்பது.

கலை இலக்கிய அரங்கம்

1. கடந்த மூன்று ஆண்டுகளில் தமுஎசவின் செயல்பாடுகள் வீரியத்தோடும், பன்முகப்பட்டதாகவும் அமைந்துள்ளன. பாபர் மசூதி இடிப்பிற்கு முன்னும், பின்னும் மதவெறியை எதிர்த்து நடத்தப்பட்ட கலை இலக்கியப் பிரச்சாரம் குறிப்பிடத்தக்கதாய் இருந்தது. அந்த அளவுக்கு இல்லை என்றாலும் நாட்டை அடகு வைக்கும் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்தும், கலை - இலக்கிய பிரச்சாரத்தைக் கொண்டு செல்ல முடிந்தது. மாநிலத்தில் நடக்கும் அநீதிகளை எதிர்த்தும் இந்த மேடையில் குரல் கொடுக்கப்பட்டது.

2. இக்காலத்தில் தமுஎச-வை மக்களிடையே நெருக்கமாகக் கொண்டு சென்றவை நாம் நடத்திய கலை - இலக்கிய இரவுகள். தமிழகக் கலாச்சார வாழ்விற்கு இந்த வடிவம் நாம் வழங்கிய ஒரு கொடை எனலாம். இது நமக்கு புதிய அந்தஸ்தையும், புதிய புதிய நண்பர்களையும் தேடித்தந்திருக்கிறது. பல்லாயிரக் கணக்கான மக்களைக் கவர்ந்திழுத்து ஓர் உண்மையான வெகு ஜன மேடையாக நமது அமைப்பு திகழவும் இது உதவியிருக்கிறது. மாவட்டத் தலைநகர்களில் மட்டும் முதலில் நடந்து வந்த கலை - இலக்கிய இரவுகள் இன்று பேரூர், சிற்றூர்களுக்கெல்லாம் பயணம் செய்துள்ளது. ஒரே ஊரில் ஆண்டு தோறும் கலை இலக்கிய இரவு நடத்தும்பொழுது ஆண்டுதோறும் புதிய நிகழ்ச்சிகளைத் தர வேண்டிய கட்டாயம் எழுகிறது. இதன் காரணமாய் கலைப்படைப்புக்களில் ஆக்கம் என்பது தொடர் செயல்பாடாய் மாற வேண்டியுள்ளது. இதுவரையில் அண்மையில் வேலூர் அருகேயுள்ள வள்ளிமலையில் நடந்த கலைப்பட்டறை மிகப் பயனுள்ளதாய் இருந்தது. அநேகமாக அனைத்து மாவட்டங்களிலும் இசைக்குழுக்களும், நாடகக் குழுக்களும் உருவாகியுள்ளன. கிராமியக் கலைக்குழுக்கள் சிலவும் இயங்கி வருகின்றன. கலை - இலக்கியம் சம்பந்தமாக புதிய பேச்சாளர்களும் இக்காலத்தில் உருவாகியுள்ளனர். இசைப்பாடல்கள் மற்றும் இலக்கிய உரை ஒலி நாடாக்கள் வெளியாகியுள்ளன எனினும், கலைக்குழுக்களின் முறையான தொடர்ந்த செயல்பாட்டையும் பல்வேறு தலைப்புகளிலான இலக்கிய உரைகளையும் உத்தரவாதப்படுத்த வேண்டியுள்ளது.

3. தமுஎச சென்னையில் நடத்திய 'தமிழ் வளர்ச்சி பண்பாட்டுப் பாதுகாப்பு மாநாடு' மொழிப் பிரச்சனை குறித்த நமது நிலைப் பாட்டை மக்களிடையே கொண்டு செல்ல துணை புரிந்தது. சிக்கலான பிரச்சனைகளையும் உரிய வழிகாட்டுதலுடன் தைரியமாகக் கையில் எடுத்தால் நம்மை நோக்கி பலரையும் ஈர்க்க முடியும் என்பதற்கு அந்த மாநாடு ஓர் எடுத்துக்காட்டாகும். உலகத் தமிழ் மாநாட்டையொட்டி மதுரையில் நடத்தப்பட்ட கருத் தரங்கம் இது விஷயத்தில் பயனுள்ளதாய் அமைந்தது. ஆயினும், தமிழ் வளர்ச்சி பற்றிய நமது சிந்தனைகளை இன்னும் பரவ லாகக் கொண்டு செல்ல வேண்டிய பணி உள்ளது.

4. இலக்கியப் படைப்புகளைப் பொறுத்தவரையில் சிறுகதைத் துறையில் நம்மவர்கள் அழுத்தமான தடங்களைப் பதித்து வரு கிறார்கள். பிரபல ஏடுகள் நடத்தும் போட்டிகளில் பரிசு பெறு வதும், நம்மவர்களின் படைப்புகளை அந்த ஏடுகள் கேட்டு வாங்கி போடுவதும், தேவையான விஷயமாய் மாறி வருகிறது. நாவல் துறையிலும் சில புதிய சாதனைகளைச் செய்திருக் கிறார்கள். கவிதை உலகில் எழும் மின்னல் வெட்டுக்கள் பல வற்றின் சொந்தக்காரர்களாய் நம்மவர்கள் விளங்குகிறார்கள். குறுநாவல் துறையிலும் நாம் இப்போது இறங்கியிருக்கிறோம். இந்தக் காலத்தில் நமது இலக்கியவாதிகளது படைப்புகள் பலவும் அடுத்தடுத்து நூல் வடிவில் வந்துள்ளன. நம்மவர்களின் படைப்புகள் சில பாட நூல்களாகவும் வைக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய எழுச்சிக்கு மாநில அளவில் நாம் நடத்திய கவிதைப் போட்டி, குருநாவல் போட்டி உதவியுள்ளன. மாநில அளவில் மற்றுமொரு சிறுகதைத் தொகுப்பும், குறுநாவல் தொகுப்பும் கொண்டுவரப்பட்டுள்ளன. சென்னை - சைதை கிளை மற்றும் நாகை கிளையும் இத்தகைய போட்டிகளை நடத்தி, தொகுப்பு நூல்களை வெளியிட்டுள்ளன. குற்றாலத்தில் நடைபெற்ற மாநில அளவிலான சிறுகதைப் பட்டறையும் பல் வேறு மாவட்டங்களில் நடத்தப்பட்ட சிறுகதை, கவிதை முகாம் களும் படைப்பாளிகளுக்கு உத்வேகத்தைக் கொடுத்தன. புதுக் கோட்டையில் கவிதைத் திருவிழா ஒன்றும் நடைபெற்றுள்ளது. 'செல்வன் கார்க்கி நினைவுப் பரிசு திட்டத்தின்' கீழ் ஆண்டு தோறும் ஒரு சிறந்த கவிதை நூலுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கி வருகிறோம்.

5. விமர்சனத் துறையிலும் இக்காலத்தில் சில புதிய சாதனை களைச் செய்து இருக்கிறோம். சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சி யைத் தொடர்ந்து கலை - இலக்கியத்தில் யதார்த்தவாதத்தையே கேள்விக்குறியாக்க சிலர் முனைந்துள்ளனர். அந்த அதி நவீன வாதிகளை எதிர்த்து ஒரு கருத்துப் போராட்டத்தை நடத்தி வருகி றோம். கம்பராமாயணம் உள்ளிட்ட பழந்தமிழ் இலக்கியங்கள், மார்க்சிய அழகியல், சிறுகதைப் படைப்பாக்க பிரச்சனைகள், பாரதி - பாரதிதாசன் - பட்டுக்கோட்டையாரின் கவிதைகள், புதுக்கவிதைகள் போன்றவை குறித்து இக்காலத்தில் கட்டு ரைகள் - நூல்கள் எழுதப்பட்டுள்ளன. 'தலித் இயக்கம்' என்பது தொடர்பாகவும் நமது நிலைபாட்டை விளக்கியுள்ளோம்.

6. பெரிய திரையும், சின்னத் திரையும் இலட்சக்கணக்கான மக்க ளைக் கவருகிறஇராட்சதக் கலைச் சாதனங்கள். இதற்குள் முற் போக்காளர்கள் நுழைவது தமிழகக் கலாச்சார வானில் பெரும் மாறுதல்களைக் கொண்டுவருவதற்கான ஒரு முன் தேவை யாகும். நமது அரசியலை மக்களிடையே மிகப் பரந்துபட்ட அளவில் கொண்டு செல்லவும் இது அவசியம். இதில் தேவைப் படும் அதிக முதலீடு, இதர சிரமங்கள் ஆகியவற்றை மனதிற் கொண்டு மிகக் கவனமாகவும் இருக்க வேண்டியுள்ளது. பிற் போக்குத்தனமான திரைப்படங்களை அடையாளம் காட்டியும், நல்ல படங்களை மனமாற வரவேற்றும் இத்துறையிலான நமது தொடர்புகளை வலுப்படுத்த வேண்டியுள்ளது. அண்மையில் துவக்கப்பட்டுள்ள 'சிறந்த திரைப்படங்களுக்கான தமுஎச விருது', இது விஷயத்தில் பெரிதும் பயன்படுகிறது. சென்னை யில் முதல் விருது வழங்கும் விழா வெற்றிகரமாக நடைபெற் றுள்ளது. தொலைக்காட்சியில் சென்னை கலைக்குழுவின் சில நாடகங்கள் ஒளிபரப்பாகியுள்ளன. நம்மவர்களின் இலக்கியப் படைப்புகளை தொலைக்காட்சி தொடராகக் கொண்டுவர பல முனைகளிலிருந்து முயற்சிகளை மேற்கொள்ள வேண்டி யுள்ளது.

